

இலங்கை வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் ஏகாந்த தியானத்தில் ஈடுபடவுள்ளதாகத் தகவல்.

**உஷ்**

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்தில் சிவனைத் தரிசிக்க இந்தியப் பிரதமர் செல்லவுள்ளதால் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் இப்போதே முன்னெடுக்கப்பட்டுள்ளனவாம்.

கோணேஸ்வரர் ஆலய அண்மித்த கடற்பரப்பில் இலங்கைக் கடற்படை கூடுதல் பாதுகாப்பு ரோந்தில் ஈடுபடவுள்ளது.


Follow us:

# தமிழன்

THAMILAN තමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 186 குரோதி வருடம், மாசி மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை (10.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 09, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




கமெண்ட் கந்தர்...

எதிர்க்கட்சி இப்படியே பலவீனமாக இருக்கும்வரை ஆளுங்கட்சி பலமாக இருக்கும் பாருங்கோ.....

## தேசபந்து தலைமறைவும் இலங்கை பொலிஸும்!

பக்கம் 04



## அன்பைத் தடுக்கும் கைபேசி

பக்கம் 06

## மதுவரியை உயர்த்தும் முன்மொழிவுக்கு கோப் குழுவில் அனுமதி

பக்கம் 08





## காஸா விற்பனைக்கு அல்ல!

பக்கம் 10

### உள்ளூராட்சித் தேர்தல் 2025:

# 17 மில்லியன் பேர் வாக்களிக்க தகுதி

### தேர்தல் திகதி 20இல் வெளியாகும்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 17 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தலை நடத்தும் திகதியை மார்ச் மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு... » 02 பக்கம்

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக்கட்சி தனிவழி;

### கொழும்பில் போட்டியிடவில்லை

### மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம்



அநுர அலை இன்னும் குறையவில்லை. அதனைக் குறைத்து மதிப்பிட முடியாது. அத்துடன், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லையென தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச் செயலாளருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று (09) காலை முதல் மதியம் வரை வவுனியாவில்... » 02 பக்கம்


### பொலிஸ் அதிகாரிகளுக்கு

# அவசர இடமாற்றம்

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பலருக்கு அதிரடியாக இடமாற்றம் வழங்க பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, விசாரணை மற்றும் அபிவிருத்தி தொகுதியின் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.எஸ்.மெண்டிஸ் மட்டக்களப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.



மனித வள முகாமைத்துவம் மற்றும் சர்வதேச தொடர்புகள் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ்... » 02 பக்கம்



# அநுர-டிரான் இரகசிய 'டீல்'!

### தேசபந்து சிக்காமலிருக்க அதுவே காரணம்

### சம்பிக்க ரணவக்க பகீர் குற்றச்சாட்டு

» 02 பக்கம்



# தேசபந்துவின் சொத்துகளை முடக்க தயாராகிறது அரசு

### சுனில் வட்டகல பகிரங்க அறிவிப்பு

» 02பக்கம்

# பாராளுமன்ற சமையலறையின் பணிகள் ஸ்தம்பிதம்

பாராளுமன்ற சமையலறையில் பல மதிப்புமிக்க உபகரணங்கள் பழுதடைந்ததால் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற சமையலறையின் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள பல நவீன உபகரணங்கள் சிறிது காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த உபகரணங்களில் பெரும்பாலானவை இப்போது பழுதடைந்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக பாராளுமன்றத் தலைவர்.... » 02 பக்கம்

# திசைகாட்டியும் தொலைபேசியும் ஒருபோதும் எமக்கு சவாலாகா!

### எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற முடிவு மக்களின் கையிலென்கிறார் திலித் எம்.பி.



நாட்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் சவாலாகக் கருதவில்லையென்றும் எது எதிர்க்கட்சி, யார் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை மக்களே... » 02 பக்கம்

# கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு கடும்போட்டி

» 02 பக்கம்




# திருச்சி– இலங்கை இடையே இண்டிகோ விமானசேவை

### மார்ச் 30இல் ஆரம்பம்

» 02 பக்கம்




## அநுர - டிரான்....

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் முன்னாள் அமைச்சர் டிரான் அலஸுக்கும் இடையிலான ஒப்பந்தமொன்றின் காரணமாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்ய முடியாமல் போயுள்ளதாக முன்னாள் அமைச்சரும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

டிரான் அலஸ், ஊழல் அல்லது கொலைச் செய்தாலும் கூட அநுரகுமார திசாநாயக்க அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் ஹோமாகம தேர்தல் செயற்பாட்டு மையம் மற்றும் அடுத்த தேர்தல் பிரசாரம் ஆகியவற்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஹோமாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றது. அதன்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசபந்து தென்னக்கோனை ஏன் கைதுசெய்ய முடியாமல் இருக்கிறது? டிரான் அலஸ் அவருக்கு பக்கபலமாக இருக்கிறார். டிரான் அலஸ் எவ்வாறான மோசடிகளை செய்திருந்தாலும், ஒருவேளை இ – விசா அல்லது இ- கடவுச்சீட்டு அல்லது அவர் வேறு ஏதாவது மோசடியை செய்திருந்தாலும் அநுரகுமார அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டார். அதுவே இருவருக்கும் இடையிலான ஒப்பந்தமாகும் என்று குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், சமூக ஊடகங்களுக்குச் சென்றால் இந்த அரசாங்கம் கூறியுள்ள பொய்களை நன்கு அறிந்து கொள்ளலாம். தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தற்போது ஏதாதொரு ஒரு விடயத்தை செய்கிறது என்றால் அதற்கு முற்றிலும் புறம்பான விடயங்களையே கடந்த ஐந்து வருடங்களில் செய்துள்ளது. ஏதாவது எதிரான கருத்துகளையே முன்வைத்துள்ளார்கள். இவர்களின் நகைச்சுவை செயற்பாடுகளுக்கு எதிராக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

நாம் ஏமாற்றமடைந்து விட்டோம். எம்மை ஏமாற்றிவிட்டார்கள். எரிபொருளுக்கு வரி அறவிட மாட்டோம் என்றார்கள். ஓரளவு மின்னுக்கான கட்டணத்தை மூன்றிலொன்றாக குறைப்போம் என்று கூறினார்கள். நிவாரணம் கொடுப்போம் என்றார்கள். சம்பளத்தை அதிகரிப்போம் என்றார்கள். திருடர்களைப் பிடிப்போம் என்றார்கள். அதில் ஒன்றும் இடம்பெறவில்லை.

திருடர்களைப் பிடிப்போம் என்று கூறிவிட்டு வெசாக் தினத்துக்காக அமைச்சின் நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவை செலவுசெய்து கார்ட் வெளியிட்டதாக கூறி பிரியங்க ஜெயரத்னவை கைதுசெய்துள்ளார்கள். ஆனால் மத்திய வங்கி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவோம் என்றே எமக்கு கூறினார்கள். ஆனால் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக இருக்கும்வரை அர்ஜுன மகேந்திரனுக்கு துளியளவும் பாதிப்பு ஏற்படாது. அவரை அழைத்து வர மாட்டார்கள். இவர்களுக்கு இடையில் இருக்கும் ஒப்பந்தம் என்னவென்பதும் எங்களுக்கு தெரியும்.

தேசபந்து தென்னக்கோனை ஏன் கைதுசெய்ய முடியாமல் இருக்கிறது. தேசபந்துவின் பின்னணியில் முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ் செயற்படுகிறார். எனவே, அநுரகுமார ஜனாதிபதியாக இருக்கும்வரை டிரான் அலஸின் இ – விசா, இ– கடவுச்சீட்டு அல்லது என்ன குற்றமிழைத்தாலும் கொலை செய்தாலும் அவற்றில் அநுர கைவிடமாட்டார். அதுவே இவர்களுக்கிடையில் இருக்கும் ஒப்பந்தமாகும்.

எங்களுக்கு எதிராக கோப்புகளை தயாரித்து எங்களை கைதுசெய்யுமாறு சட்ட மா அதிபருக்கு கூறுவதாகவும் அவ்வாறு எப்படி எங்களை கைதுசெய்வது என்று பொலிஸார் எங்களிடம் கேட்கிறார்கள். இவர்களுக்கு இடையிலான ஒப்பந்தம் என்ன? வியாபார நோக்கம் என்ன? பொதுமக்கள் எந்தளவுக்கு ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம் என்றார்.

## கொழும்பு மாநகர...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மேயர் பதவிக்கு கடும்போட்டி நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக தேசிய மக்கள் சக்தி (NPP) செயற்குழு உறுப்பினர் வ்ரே காலி பால்தாசர் பெயரிடப்பட்டுள்ளார்.

ஒரு பொதுக் கூட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போது மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் வேட்புமனு பட்டியலில் 25% பெண் வேட்பாளர்களை நிறுத்த தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளதாகவும் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் யார் என்பதை உரிய நேரத்தில் அறிவிப்போம் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். நன்கு ஆராய்ந்து பொருத்தமான ஒரு நபரை தெரிவுசெய்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை போன்ற ஒரு அனுபவம் வாய்ந்த நபரொருவரை நியமிக்க திட்டமிட்டிருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேசபந்துவின்...

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டால் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் அவரின் சொத்துகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

மோதர பிரதேசத்தில் நேற்று (09) இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

சட்டத்தை அமுல்படுத்தும்போது ஒருவரின் தகுதி தராதரம் அவசியமில்லை. முன்னாள் ஜனாதிபதியாக இருக்கலாம், முன்னாள் பிரதமராக இருக்கலாம் அல்லது முன்னாள் பொலிஸ் மா அதிபராக இருக்கலாம். அது எங்களுக்கு அவசியமில்லை.

தேசபந்து தென்னக்கோன் தற்போது தலைமறைவாகியுள்ளார். தான் சட்ட ரீதியாக செயற்பட்டிருந்தால் தலைமறைவாவதற்கு எந்த காரணமும் இல்லை. அவர் முன்னாள் பொலிஸ் மா அதிபராக இருந்து தவறிழைத்திருந்தால், எங்களின் அரசாங்கத்துக்கு அவர் பெரியவர் இல்லை. அவரை தேடிக் கண்டுபிடிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவர் வெளியில் வராவிட்டால் அடுத்தக் கட்ட நடவடிக்கைக்கு செல்ல நேரிடும். அதற்கான சட்ட ஏற்பாடுகளும் இருக்கின்றன. 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமைய ஒருவர் குற்றமிழைத்துவிட்டு நீதிமன்ற அறிவிப்பை செவிமடுக்காமல் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகியிருந்தால் அவரின் சொத்துகளை முடக்க முடியுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனுக்கு காலம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் சரணடையாவிட்டால் குற்றவியல் வழக்கு ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளின் 60, 61, 62ஆவது உறுப்புரைகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டியேற்படும். இந்த சட்டம் நீண்டகாலம் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் இதனை தேசபந்து தென்னக்கோனிடமிருந்து ஆரம்பிக்க முடியும்.

அவரின் அசையும் அசையா சொத்துகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனில் தலைமறைவாகியுள்ள இடத்திலிருந்து வெளியில் வரவேண்டும். அவரிடம் பெரும் சொத்துகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அப்படியில்லாவிட்டால் குற்றவியல் வழக்கு ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளின் 60, 61, 62 ஆவது உறுப்புரைகளை கையிலெடுக்க நேரிடும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொலிஸ் அதிகாரிகளுக்கு...

அத்தியட்சகர் டபிள்யூ.ஜே.சேனாதீர மேல் மாகாண வாகன போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் போக்குவரத்து பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பீ.மஹகிரில்ல இரத்தினபுரிக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் பண்டாரவளை தொகுதிக்கு பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் யு.பி. களுபஹன மொனராகலைக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 28 வரையான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பரிசோதகர் வை.மதுசங்க காலி பிரிவிலிருந்து பிட்டிகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.சீ.டி.சில்வா காலி பிரிவிலிருந்து ஹபராதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பொலிஸ் பரிசோதகர் சீ.பீ.விஜேரத்ன நீர்கொழும்பு பிரிவிலிருந்து நுன்கமுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பதிரலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் பீ.டீ.கொலம்பகே அக்கராயங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் உதாசிறிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.பி.வெதசிங்க பதுரலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பரிசோதகர் டீ. பீ.பொன்சேகா திருகோணமலை பொலிஸ் பிரிவிலிருந்து உதாசிறிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் லுனுகம்வெஹெர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் சி.விக்ரமரத்ன மொனராகலை பிரிவில் கடமையாற்றவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.ஏ.டி.சில்வா எல்பிட்டிய பிரிவிலிருந்து லுனுகம்வெஹெர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் அளுபோமுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் டி.சி.ஏ.ராஜகருணா அங்குருவாதொட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.விஜேவீர அளுபோமுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.டி.சரத்வன்ர பானதுறை பிரிவிலிருந்து பானதுறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் எச்.என்.பண்டார குளியாப்பிட்டியவிலிருந்து ஹெட்டிபொல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒ.பீ.அபேரத்ன பயங்கரவாத தடுப்பு மற்றும் கிரிபத்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.எஸ்.தர்ஷன பானந்துறையிலிருந்து தெம்புவன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும், ஊருகஸ்மங்ஹந்தி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.எல். கீர்த்திசிங்க மொரவெவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜே.எச்.ரங்க தங்காலையிலிருந்து ஊருகஸ்மங்ஹந்தி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் வீரவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.சி.ராஜபக்ஷ பண்டாரதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பொலிஸ் பரிசோதகர் டீ.எம்.என். புஸ்பகுமார திருகோணமலையிலிருந்து வீரவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ.ஜே.பண்டார மாத்தளையிலிருந்து கொழும்பு துறைமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் ருவன்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் கே.கே.ஜே. துஷார தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் மனித உரிமைகள் பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.கே. சந்ரசிறி ருவன்வெல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிங்தெனிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் எஸ.பி. திசாநாயக்க கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் (பெண்) ஏ.ஏ.கே. அபேசேகர கேகாலையிலிருந்து பிங்தெனிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் டி.எஸ்.பிரியந்த காலியிலிருந்து ரத்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும். ஹக்மன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.ஏ. சனத் குமார வெலிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.ஜே. ரத்நாயக்க மாத்தறையிலிருந்து ஹக்மன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பொலிஸ் பரிசோதகர் எச்.டி. ஜயதுங்க பதுளையிலிருந்து கந்தெகெட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.அமில எம்பிலிபிட்டியவிலிருந்து அம்பலாந்தொட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## பாராளுமன்ற...

ஒருவரிடம் விசாரித்தபோது, கடுமையான நிதி நெருக்கடி காரணமாக, இந்த நேரத்தில் உபகரணங்களை வாங்கவோ அல்லது சரிசெய்யவோ முடியாது என்று கூறினார்.

இந்த பாராளுமன்ற சமையலறை பாராளுமன்ற உறுப்பினர்கள், விருந்தினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தினமும் உணவு தயாரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## திசைகாட்டியும்...

தீர்மானிக்க வேண்டும் என்றும் சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னிட்டு ‘சர்வஜன சபை’ என்ற கருப்பொருளின் அடிப்படையில் போட்டியிடத் தயாராகவுள்ள வேட்பாளர்களை தெரிவுசெய்யும் முதலாம் கட்ட நடவடிக்கை சர்வஜன அதிகாரத்தின் தலைமை அலுவலகத்தில் பெரும் எண்ணிக்கையிலான வேட்பாளர்களின் பங்கேற்புடன் நேற்று (09) இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாட்டிலுள்ள சகல இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அந்த அழைப்பை ஏற்று பெரும் எண்ணிக்கையிலானவர்கள் எங்களுடன் கைகோர்த்திருக்கிறார்கள்.

வேட்பாளர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை ஐந்து கட்டங்களாக முன்னெடுக்கத்திட்டமிட்டுள்ளோம். அதில் முதலாவது கட்டம் ஆரம்பமாகியுள்ளது. முன்னாள் உறுப்பினர்களும் எங்களுடன் இணைந்துகொண்டுள்ளார்கள். அதிருப்தியிலுள்ளவர்கள் யாரும் எம்முடன் இணையவில்லை. எங்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களே கைகோர்த்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்தகால அரசியல் செயற்பாடுகளில் இருந்த ஒருசில குறைபாடுகளின் காரணமாகவே தேசிய மக்கள் சக்தி கடந்த இரு தேர்தல்களிலும் முன்னிலை வகித்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய சூழலையே நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் மக்களுடன் இணைந்து இருக்கிறோம். அவர்கள் மக்களுடன் இல்லை. மக்களுடன் இடைவெளியை பேணியே அரசியல் செய்ய முயற்சிக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒரு அப்பாவி நபர். இதற்கு அப்பால் அடுத்தக் கட்டத்தை நோக்கி நாங்கள் பயணிக்க வேண்டும். எதிர்க்கட்சி எதிர்க்கட்சியின் தலைமைத்துவம் என்பது மக்களின் மனதிலிருக்கும் விடயமாகும். எது எதிர்க்கட்சி, யார் எதிர்க்கட்சித் தலைவர் என்பது மக்களுக்கு தெரியவேண்டும். தொலைபேசி சின்னத்தை நாங்கள் என்றும் சவாலாக கருதியதில்லை. அதற்கு காரணம் எங்களின் அரசியல் மாறுபட்டது. எங்களின் அரசியல் பிரதிபலிப்பும் நோக்கமும் வேறுபட்டது. அதனால் நாங்கள் சவாலாகக் கருதவில்லை. தொழில்முனைவு பின்புலம் கொண்டவர்களே எங்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இணைந்துகொண்டுள்ளார்கள்.

அநுரகுமார திசாநாயக்கவின் வேலைத்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. சகலரையும் எதிர்க்கட்சி என்று குறிப்பிட்டு ஹோட்டலில் பேச்சுவார்த்தை நடத்தி எதிர்க்கட்சியை இல்லாமலாக்கவே முயற்சிக்கிறார்கள். ஆனால் சர்வஜன அதிகாரம் அதில் பங்காளி இல்லை. எந்த அரசியல் சூழ்ச்சியிலும் பங்காளராகும் எதிர்பார்ப்பும் எங்களுக்கு இல்லை என்றார்.

## திருச்சி – இலங்கை...

இந்தியாவின் விமான நிறுவனமான இண்டிகோ நிறுவனம், எதிர்வரும் 30ஆம் திகதி முதல் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி (திருச்சி) மற்றும் இலங்கை இடையே தினசரி நேரடி விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்துவரும் பயணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் வணிகம், ஓய்வு மற்றும் மதப் பயணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவத்தை வழங்குவதற்காகவும் புதிய வழித்தடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) லிமிடெட் (AASL) நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இண்டிகோ எயார்லைன்ஸ் (6E), யாழ்ப்பாணத்துக்கு புதிய விமான சேவையை ஆரம்பிப்பதற்காக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமான போக்குவரத்து விரிவாக்கம் தென்னிந்தியாவுக்கும் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான விமான போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளூராட்சித் தேர்தலில்...

அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன்பின் வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் கட்சியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு ஊடக சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக மட்டுமே ஆராயப்பட்டது. கட்சியின் மத்திய செயற்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. அதன்படி வடக்கு - கிழக்கு மாவட்டங்களின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடும்.

இந்த தேர்தல் முக்கியமானதொரு தேர்தல். நாங்கள் ஒவ்வொரு தேர்தல்களையும் முக்கியமானதொரு தேர்தல் என்றே கூறி வந்துள்ளோம். உண்மை அது தான். ஒவ்வொரு தேர்தல்களில் அவ்வக் காலப்பகுதிகளில் வேறு வேறு நோக்கங்களுக்காக முக்கியமான தேர்தலாக இருக்கும். இம்முறை நாடு அநுர அலையில் உள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு தவிர ஏனைய மாவட்டங்களில் அநுர அலையில் எமது மக்களின் வாக்குகள் சென்றுள்ளது. திருகோணமலையில், மட்டக்களப்பில் நாம் பெரும்பான்மை பெற முடியாது. வடக்கில் நாம் தான் பெரும்பான்மை. எனினும் மக்கள் அநுர அலையில் சிக்கி ஜனாதிபதி தேர்தலைக் காட்டிலும் பாராளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை வழங்கியிருந்தார்கள். ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாச வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை பெற்றார். ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் இந்த நிலை மாறியது.

தற்போது அநுர அலை குறைந்து விட்டது என்கிறார்கள் சிலர். அப்படி கூறமுடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாக கையாண்டு நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு. நாம் வீட்டோடு என செயற்பட வேண்டும்.

எமது உள்ளூர் அதிகாரங்களை நாம் விட முடியாது. எனவே நாம் இந்த தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்கு மிக்கவர்களை நிறுத்த வேண்டும். அதன் மூலமே அதிக வெற்றி வாய்ப்பை பெற முடியும். அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரத்தை எமது மாவட்ட கிளைகளுக்கு வழங்கியுள்ளோம்.

தேர்தல் முடிந்த பின் ஆட்சி அமைக்கின்ற போது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி ஆட்சியமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில சபைகளின் நிலைமையை கருத்தில் கொண்டு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது.

வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் பெரும்பான்மையினரிடம் அப் பிரதேச சபை செல்லும் வாய்ப்புள்ளது. சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் எனத் தீர்மானித்துள்ளோம்.

கொழும்பு மாநகர சபையில் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளன. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும், அதன் வேட்பாளர்களின் பின்புலம் தொடர்பாக ஆராய்வதில் பல்வேறு சவால்கள் உள்ள காரணத்தினால் இம்முறை கொழும்பில் போட்டியிடுவதில்லை என மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார்.

## உள்ளூராட்சித் தேர்தலில்...

பின்னரே அறிவிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெற்று 35 -49 நாட்களுக்குள் தேர்தலை நடத்த எதிர்பார்ப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தலுக்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து சகல மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் மாவட்ட பிரதி/உதவி தேர்தல் ஆணையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

2025 முதலாம் இலக்க உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஏற்பாடுகள் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை இடம்பெறும். இதற்கிடையில் 336 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வேட்புமனுக்களை சமர்ப்பிப்பதற்கான அறிவித்தலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உள்ளூராட்சிமன்ற 4,872 தொகுதிகளுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காகவே இந்த தேர்தல் நடத்தப்படவுள்ளது.

அதற்காக ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையில் பதிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களே இம்முறை தேர்தலுக்கு வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

இதுதொடர்பில், சகல மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் மாவட்ட பிரதி /உதவி தேர்தல் ஆணையாளர்களை நேற்று முன்தினம் (08) சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் முறை, சட்ட நடைமுறைகள் தொடர்பில் ஆலோசனைகளையும் பணிப்புரைகளையும் அவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

மேலும், வேட்புமனுத் தாக்கல் ஏற்பட்டது முதல் தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரை செயற்பட வேண்டிய விதம், சட்ட நடைமுறைகள் தொடர்பில் பிரதி /உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

தற்போது தபால்மூல வாக்காளிப்புக்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்பட்டு வருகின்றன. 12ஆம் திகதியுடன் தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப நடவடிக்கைகள் நிறைவடையும். அதற்கமைய தபால்மூல வாக்களிப்புக்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தேர்தல் கடமையில் ஈடுபடும் சகல அதிகாரிகளுக்கும் சிக்கலை ஏற்படுத்தும் தேர்தலாகவே இது அமைந்துள்ளது. மேலும் வேட்புமனுக்களை கையேற்கும்போது இம்முறை 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்துக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். அதற்கமையை சகல அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்கள் தமது வேட்புமனுக்களில் தொகுதி வேட்பாளர்களில் 10 சதவீதம் பெண் பிரதிநிதித்துவத்துக்கும் மேலதிக பெயர் பட்டியலில் 50 சதவீத பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அவ்வாறே இளைஞர்களுக்கான 25 சதவீத பிரதிநிதித்துவத்தை கட்டாயம் பெற்றுக்கொடுக்க வேண்டும். சகல வேட்புமனுக்களிலும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதம் 18-25 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ள சகல கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டியது அவசியமாகும்.

புதிய இலஞ்ச ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் சகல வேட்பாளர்களும் வேட்புமனுத் தாக்கல் செய்யும்போது அவர்களின் சொத்து விபர அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இதுதொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஏதாவதொரு உள்ளூராட்சி மன்றத்துக்கு எந்த வேட்புமனுவும் தாக்கல் செய்திருக்காவிட்டால் மீண்டும் வேட்புமனுவை கோர வேண்டி ஏற்படும். அதேபோன்று ஏதாவதொரு விதத்தில் சகல வேட்புமனுக்களும் இரத்தாகினாலும் மீண்டும் வேட்புமனுவை கோர வேண்டி ஏற்படும். அதனால் தேர்தலை நடத்தும் திகதியை மார்ச் மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு பின்னரே அறிவிக்கக் கூட்டியதாக இருக்கும். சட்டத்தின் பிரகாரம் வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெற்று 35 - 49 நாட்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

# சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளர் ஜனாதிபதி அநுர ஆகியோருக்கிடையில் நிகழ்நிலை சந்திப்பு





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகியோருக்கிடையிலான நிகழ்நிலை சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை (07) நடைபெற்றது.

2023 மார்ச் மாதத்தில் ஆரம்பமான 48 மாதங்கள் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கு (EFF) அமைவான ஒப்பந்தம் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துக்கிடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது 2022 ஆம் ஆண்டில் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். பொருளாதார மறுசீரமைப்பை செயற்படுத்தல், பேரண்ட பொருளாதார ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தல், ஆபத்துக்குள்ளாகக் கூடிய தரப்பினருக்கு உதவுதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் இலங்கை அடைந்திருக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் முகாமைத்துவப் பணிப்பாளர், சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுவால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

உலக பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தைத் தாங்கிக்கொள்ளும் நிலையுடையதாக மாற்றுவதற்கு இந்தத் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை முழுமைப் படுத்தல் மற்றும் பிணைமுறி பரிமாற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பை சாதகமான முறையில் நிறைவு செய்தமை தொடர்பில் ஜோர்ஜிவா ஜனாதிபதிக்கு வாழ்த்து கூறினார். முக்கிய மறுசீரமைப்பை முன்னெடுக்க இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு முகாமைத்துவப் பணிப்பாளர் பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தினார். குறிப்பாக, உலக ஸ்திரமற்ற தன்மையின் உயர்வு, உலக பொருளாதார முன்னேற்றத்தின் மந்த நிலை மற்றும் உலக கடன் மட்டத்தின் உயர்வுக்கு மத்தியில் நல்லாட்சிக் கட்டமைப்புடன் பேரண்ட பொருளாதார நியதிகளையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜோர்ஜிவா வலியுறுத்தினார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மீளாய்வுகளை சாதகமாக நிறைவு செய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி இதன்போது கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவிடம் உறுதிப்படுத்தினார்.

எதிர்காலத்தைப் பார்க்கும்போது இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கித் தீர்மானம் மிக்க வகையில் நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜோர்ஜிவா இதன்போது வலியுறுத்தினார்.

# வீடு புகுந்து தாக்குதல் நடத்திய இலங்கை கிரிக்கெட் வீரர் கைது



இலங்கை கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார பிலியந்தலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை கொல்லமுன்ன பிரதேசத்தில் வசிக்கும் அஷேன் பண்டார, மற்றொரு நபரின் வீட்டினுள் புகுந்து தாக்குதல் நடத்தியதற்காக கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அஷேன் பண்டார தனது வீட்டுக்கு அருகிலுள்ள ஒருவருடன், வீதியை மறிக்கும் வகையில் காரை நிறுத்தியதற்குப் பிறகு ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட அஷேன் பண்டார, பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 12ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் திறப்பு





இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இவ் அலுவலகத்திலேயே வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் தொடர்பாடல் காரியாலயமும் இயங்குமெனத் தெரிவிக்கப்படும் நிலையில், வவுனியா குருமன்காடு காளிகோவில் வீதியில் நேற்று (09) திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதிகளாகக் கலந்துகொண்ட கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், ப.சத்தியலிங்கம் ஆகியோர் புதிய அலுவலகத்தை திறந்துவைத்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், க.கோடீஸ்வரன், ஞா.சிறிநேசன், குகதாசன், ஸ்ரீநாத், இ.சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்ட கிளையினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தலதா மாளிகைக்கு வரும் பக்தர்களுக்கு உணவளிக்க பதிவுகள் வழங்க நடவடிக்கை

## கண்டி மாநகரசபை தீர்மானம்

(எம்.ஏ.அமீனுல்லா)

வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புத்தபெருமானின் தந்தம் மற்றும் அதனைத் தரிசிக்க கண்டிக்கு வரும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்கான பதிவுகளை வழங்க கண்டி மாநகரசபையின் சுகாதார மற்றும் மருத்துவத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கியூஆர் குறியீட்டைப் பயன்படுத்தி இணையவழி மூலம் பதிவுசெய்து அனுமதி பெறுகின்ற நபர்கள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே கண்டிக்கு வரும் பக்தர்களுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்க முடியுமெனவும் இது தலதா காட்சிக்குரிய கால எல்லைக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுமெனவும் கண்டி மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பசன் பறகும் ஜெயசிங்க நேற்று (09) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

உரிய பதிவேடு கிடைத்ததும் உணவு பதப்படுத்தும் வசதியை ஆய்வுசெய்து பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் அடங்கிய ஆவணத்துடன் நகரசபையின் சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறை மூலம் சான்றிதழ் வழங்கப்படுமெனவும் குறிப்பாக, அந்தச் சான்றிதழ் இல்லாமல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க வாய்ப்பளிக்கப்படாதெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தலதா கண்காட்சி நேரத்தில் பக்தர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்காக இதுவரை 27 நிறுவனங்கள் பதிவுசெய்துள்ளதாகவும் மேலதிக தகவல்களை கண்டி நகர சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் ஜெயசிங்க தெரிவித்தார்.

தலதா தரிசனத்தின்போது இலட்சக்கணக்கான மக்கள் புனித தந்தத்தை தரிசிக்க வருவதால் அவர்களின் சுகாதாரப் பாதுகாப்பில் கூடுதல் கவனஞ்செலுத்தி உரிய திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் புத்தாண்டு காலத்தை முதன்மையாகக்கொண்டு கண்டி மாநகர ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை கண்காணிப்பு செய்வதாகவும் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மாசி மாதம் 26ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** வீடு, வாகனங்களால் வீண் செலவீனங்கள், தொல்லைகள் ஏற்படலாம். தாய்க்கு பீடை.

**ரிஷபம்** மனத்துணிவுடன் எதையும் சாதிப்பீர்கள். நண்பரிடமிருந்து உங்களுக்கு உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்** வீண் பேச்சைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாய செலவினங்களால் தொல்லைகள் உண்டு.

**கடகம்** உடல் நோய்கள் குணமடையும் நாள். எந்தச் சவால்களையும் முறியடிப்பீர்கள்.

**சிம்மம்** வெளியிடத்தில் அல்லது குடும்பத்தில் அவமானம் ஏற்படும். வீண் அலைச்சல்களால் உடல் அசதி.

**கன்னி** கடந்த நாட்களில் உங்கள் கைநழுவிப் போனவை மீண்டும் கிடைக்கும். புதிய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**துலாம்** புகழ், கீர்த்தி, செல்வாக்கு உயரும். செய் தொழிலில் திட்டமிட்ட இலாபங்களை அடைவீர்கள்.

**விருச்சிகம்** தடைப்பட்டிருந்த உங்கள் வெளி நாட்டுப் பயணம் சிறப்பாக அமையும். பூர்வீக சொத்துகளால் சங்கடங்கள் தோன்றும்.

**தனுசு** கடுமையான அலைச்சலுடன் காரியக் கேடும் ஏற்படும். கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

**மகரம்** நீண்டநாள் காதலியை சந்திப்பீர்கள். பங்கு வியாபாரத்தில் எண்ணிய இலாபத்தை அடைவீர்கள்.

**கும்பம்** நோயிலிருந்து விடுதலை. நீண்ட நாள் சத்துருக்கள் உங்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்.

**மீனம்** புத்திரர்களால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். தேவையற்ற செலவுகள் மன நிம்மதியைக் கெடுக்கும்.

| | |
|---|---|
| **திதி:** | ஏகாதசி மு.ப.7.44 வரை பின் துவாதசி |
| **நட்சத்திரம்:** | பூசம் பி.இ.12.51 பின் ஆயிலியம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம் :** | சித்த யோகம் |
| **வார சூலை:** | கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்:** | காலை- 6.19 – 7.19 மணிவரை பகல் - 1.19 – 2.19 மணிவரை மாலை- 3.19 – 4.19 மணிவரை |
| **ராகு காலம்:** | 7.49 – 9.19 மணிவரை |
| **எமகண்டம் :** | 10.49 – 12.19 மணிவரை |
| **குளிகை :** | 1.49 – 3.19 மணிவரை |
| **சந்திராஷ்டமம்:** | தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 12.51 வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 12.51 மேல்**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விசேட தினம்:** ஏகாதசி விரதம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739



எதிர்காலத்திற்கு பெறுமதி வாய்ந்த நல்வாழ்த்து!

நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் கனவுகள் வெற்றியடையும் வேளை அன்பார்ந்தவர்களின் ஒவ்வொரு பாசமிக்க அரவணைப்பிலும் இருப்பது அன்பான வாழ்த்துக்களே.

எட்டுத்திக்கும் ஒலிக்கும் நல்வாழ்த்துக்களுக்கு மத்தியில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் வழங்கும் சுப பெத்தும் புலமைப்பரிசில் ஆனது, சிறப்புற சித்தியடைந்த எமது நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வழங்கக்கூடிய பெறுமதிமிக்க நல்வாழ்த்தாகும்.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப்
சுப பெத்தும்
தேசிய புலமைப்பரிசில் திட்டம்

225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2023 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

சுப பெத்தும் புலமைப்பரிசிலுக்கான தகைமையை பெறுவதற்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு www.sliclife.com ஊடாக இப்போது விண்ணப்பிக்க முடியும்.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லை.ஃப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு

| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் |
|---|---|---|
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் |

2025 மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 1377 அழையுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLIC ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் LIFE தந்தையும் தாயும் போன்று

Company Registration Number - PB 286362

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 10ஆம் திகதி, திங்கட்கிழமை

# தேசபந்து தலைமறைவும் இலங்கை பொலிஸும்!

நீதிமன்ற உத்தரவைப் புறந்தள்ளி, பொலிஸாரின் விசாரணைகளுக்கும் ஒத்துழைக்க மறுத்து தலைமறைவாகித் திரிகிறார் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசமைப்புக் பேரவையின் முடிவை - தீர்மானத்தை - அதன் தலைவராகச் செயற்பட்ட முன்னாள் சபாநாயகர் அரசியல் நோக்கங்களுக்காக - இலக்குகளுக்காக - வேண்டுமென்றே தவறாக அர்த்தப்படுத்தி, குயுக்தித்தனம் பண்ணியமையால் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராகும் வாய்ப்புக் கிட்டியது.

ஆனால், அப்படி அந்தப் பதவியை அவர் பெற்றுக் கொண்டமை தவறெனத் தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவர் பதவியிலிருந்து உயர்நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டார். அந்தப் பின்புலத்தில் அவரது கெடுகாலம் தொடங்கியது.

அரசியல் சூதாட்டம் மூலம் பதவியை அவர் எட்டுவதற்கு உதவிய அரசியல்வாதிகள் எவரும் இப்போது சட்டத்தின் முன் - நீதிமன்றத்தின் முன் - அவரைப் பாதுகாக்கவோ காப்பாற்றவோ வரப்போவதில்லை.

சில சமயங்களில் குறுக்கு வழியில் அவருக்கு அந்தப் பதவியைப் பெற்றுக்கொடுத்த அரசியல்வாதிகள் அந்தத் தவறுக்காக தண்டனை அனுபவிக்க அல்லது பிராயச்சித்தம் தேடக் கட்டாயப்படுத்தப்படலாம்.

ஆயினும், தேசபந்து தென்னக்கோன் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வழி கிடைக்குமா என்பது தெரியவில்லை.

எது, எப்படியாயினும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய வாய்ப்பும் பதவியும் தமக்கு கிட்டியபோது அவற்றை அரசியல் பக்கம் சாராது நேர்மையாக அவர் ஆற்றியிருந்தால் அவருக்கு இந்த நிலைமை வந்திருக்காதென்பது மட்டும் நிஜம்.

இலங்கை பொலிஸாருக்கு இப்படி ஓர் இக்கட்டு நிலை வரக்கூடாது. தங்களுடைய பொலிஸ் துறையின் தலைவரையே - பொலிஸ் மா அதிபரையே - அவர்கள் இப்போது நாட்டுக்குள் தலைமறைவான கள்வனைத் தேடுவதுபோல தேடிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு வாரங்களாகத் தேடுகிறார்கள். ஆனால், அவர்தான் சிக்குபவராக இல்லை.

குற்றமிழைத்தவர்களை - கொலைகாரர்களை - கொள்ளைக்காரர் களை - திருடர்களை - சந்தேக நபர்களை - தேடுகின்ற பொலிஸார் இப்போது அவர்களோடு சேர்ந்து தங்கள் பொலிஸ்துறையின் தலைவரையும் தேடும் அவல நிலைமை.

பொலிஸ் மா அதிபரான தேசபந்து தென்னக்கோன் உயர்நீதிமன்ற உத்தரவொன்றின் பேரில் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்; கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார். எனினும், அவர்தான் பொலிஸ் மா அதிபர். அவர் நீதிமன்ற வழக்கின் மூலம் உத்தியோகபூர்வமாகப் பதவியை இழக்கும் வரை - அல்லது பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயதை அவர் அடையும்வரை - அந்தப் பதவி நிரப்பப்பட மாட்டாது.

அதனால் இப்போது அவரது இடத்துக்குப் பதில் பொலிஸ் மா அதிபரொருவர் நியமிக்கப்பட்டு அவர் பொலிஸ் மா அதிபரின் பதவியை ஆற்றி வருகின்றார்.

பொலிஸ் மா அதிபர் பதவியை தாம் ஈட்டுவதற்காக அரசியல் தலைமைகளுக்கு வளைந்து, நெளிந்து கொடுத்ததன் விளைவை தேசபந்து தென்னக்கோன் இப்போது அனுபவிக்கின்றார் என்று கூறலாம்.

அந்தப் பதவியைப் பெற்றதும் நாட்டில் பாதாள உலகக் குழுவினர் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவரையும் கதிகலங்க வைத்தவர் தேசபந்து தென்னக்கோன்.

இத்தரப்பினருக்கு எதிராக 'யுக்திய' என்ற பெயரில் ஒரு முழு அளவிலான யுத்தத்தையே பிரகடனப்படுத்தி அதிரடி நடவடிக்கைகளை எடுத்தவர் அவர். அவரது பாய்ச்சலுக்கு ஈடு கொடுக்க முடியாமல், பாதாள உலகக் குழுவினரும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களும் ஓடி ஒளிந்து கதிகலங்கியமை பேசப்பட்ட விடயம்.

இப்போது அவரே அதேபோல ஓடி ஒளிந்து கதி கலங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

விதி வலியது என்பது இதனைத்தானோ...?

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில், பல்வேறு குசும்புத்தனங்களைப் பண்ணி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு வந்த தேசபந்து தென்னக்கோனுக்கு, இப்போது ஏன் அந்தப் பதவிக்கு வந்தோம் என்று ஞானம் பிறந்திருக்குமென நம்பலாம்.

## இன்றைய நாளில்...

- 1876 – அலெக்சாண்டர் கிரஹம்பெல் உலகின் முதல் வெற்றிகரமான தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.
- 1893 – ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.
- 1902 – துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நிலநடுக்கத்தால் முற்றாக அழிந்தது.
- 1922 – கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். எனினும், இரண்டாண்டுகளில் குடல்வால் அழற்சி காரணமாக விடுதலையானார்.
- 1948 – இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 – கியூபாவில் புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டா தலைமையில் இராணுவப் புரட்சி வெற்றி பெற்றது.
- 1977 – யுரேனஸ் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1982 – கிரகங்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.
- 2006 – செவ்வாய் உளவு சுற்றுக்கலன் செவ்வாய்க் கிரகத்தை அடைந்தது.

# பாலின அடிப்படையிலான வன்முறை எமது வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம்

**ஒரு விரிவான பார்வை!**

எஸ்.டொரின்

பாலின அடிப்படையிலான வன்முறை (Gender-Based Violence, GBV) என்பது பாலினத்தின் காரணமாக ஒருவருக்கு ஏற்படும் தீங்கு அல்லது துஷ்பிரயோகம் எனக் கூறலாம்.

இதில் வற்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், பொய்கள், கலாசார அழுத்தங்கள் அல்லது பணம் ஆகியவை அடங்கும். பெரும்பாலும், பெண்கள் பாலின அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

இருப்பினும், LGBTIQ+ நபர்கள், சிறுவர்கள் மற்றும் ஆண்களும் இதில் பாதிக்கப்படலாம்.

பாலின அடிப்படையிலான வன்முறை (Gender-Based Violence, GBV) உலகம் முழுவதும் பெரும் சவாலாக உள்ளது. இது சமூகத்துக்கு மட்டுமன்றி, பொருளாதாரத்துக்கு கூட தீவிரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. பாலின அடிப்படையிலான வன்முறையின் பொருளாதாரத் தாக்கம் பல்வேறு தளங்களில் தோன்றி, அதன் விளைவுகள் பல ஆண்டுகளாக நீடிக்குமென்றே கூறவேண்டும்.

***01. பயன்பாட்டின் நேரடிச் செலவுகள்:***

**சுகாதார சேவைகள்:**

பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிப்படைந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் சிகிச்சைக்கு அடிக்கடி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். இதற்கான மருத்துவ செலவுகள், மருந்துகளின் செலவுகள், சிகிச்சைகள் ஆகியவை பொருளாதாரத்தில் ஒரு பெரிய சுமையாக இருக்கின்றன.

**பொதுப் பாதுகாப்பு சேவைகள்:**

பொலிஸாரின் ஒத்துழைப்பு, வழக்குப் பதிவு, நீதிமன்ற செயல்முறை ஆகியவை வன்முறைக்கு மத்தியில் நேரடிச் செலவுகளாக இருக்கின்றன.

**02. உற்பத்தித் திறன் குறைவு:**

வன்முறைக்குள்ளாகும் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்கள் பொதுவாக உற்பத்தி செய்யும் திறனைக் குறைக்கின்றனர். இது வேலை செய்ய முடியாமை, வேலை இழப்பு, உற்பத்தி செயல்திறன் குறைவு போன்றவற்றை உண்டாக்குகிறது.

பல பெண்கள் இந்த வன்முறையைத் தடுக்கவோ அல்லது அதற்குள்ளாகி வாழ்வதற்காக வேலைக்குச் செல்ல முடியாமல் தவிர்க்கின்றனர். இது அவர்களின் வருமானம் மற்றும் வேலைவாய்ப்புகளைப் பாதிக்கின்றது.

**03. குடும்ப மற்றும் சமூக விவசாய பொருளாதாரத் தாக்கம்:**

பாலின அடிப்படையிலான வன்முறை குடும்பத்தின் வாக்களிப்பையும் சமூகத்தின் ஒருங்கிணைப்பையும் பாதிக்கின்றது. குடும்பங்கள் பெரும்பாலும் வன்முறையின் பாதிப்பால் திறமை குறைவாக இருக்கும். இதனால் பணம் ஈட்டும் திறன் குறைந்து குடும்ப பொருளாதார நிலை பாதிக்கப்படும்.

சமூகத்தில் வன்முறை தொடர்பான பாதிப்புகள் சமூகத்தினரிடையே மரியாதை, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை இழக்க வைக்கும்.

**04. ஏனைய பின்விளைவுகள்:**

பாலின அடிப்படையிலான வன்முறை மனஅழுத்தம், மனநல சரிவுகள், எளிதான மன அழுத்தம், கவலை, கண்ணீர் வருதல் போன்றவற்றை உண்டாக்குகிறது. இது சம்பந்தப்பட்ட நபர்களின் செயல்திறன் மற்றும் பொறுப்பாளத்துவத்தில் குறைவு வராமல் அதிகமான மருத்துவ மற்றும் மனநல செலவுகளை ஏற்படுத்துகிறது.

**05. சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியில் பங்குபற்றுதல்:**

வன்முறைக்கு உள்ளாகிய பெண்கள் மற்றும் குழந்தைகள் பொதுவாக அவர்களுடைய கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நுட்ப திறன்களில் முன்னேற்றம் காண முடியாது. இது அவர்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும்.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் முயற்சிகள் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க முடியும்.

**06. சுற்றுச்சூழல் பாதிப்புகள்:**

சமூகத்தில் உள்ள பாலின அடிப்படையிலான வன்முறைகள், சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு எளிதில் சவால்களை உருவாக்கக்கூடும். இது வேளாண்மை, தொழில்கள் மற்றும் பிற சமூகத்தின் முக்கியமான பகுதிகளைப் பாதிக்கின்றது.

இந்த எல்லா விளைவுகளும் சமூகத்தில் உள்ள பல்வேறு சட்ட மற்றும் உத்தரவுகளுக்கெதிராக தாக்கம் ஏற்படுத்தி, பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றன. பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நலனுக்கும் முக்கியமானவை.

***02. வேலை இழப்பு மற்றும் வேலைத்திறனின் குறைவு:***

பாலின அடிப்படையிலான வன்முறை பொருளாதார, சுகாதாரச் செலவுகள் மற்றும் சமூக நல அமைப்புகளை எவ்வாறு பாதிக்கிறது?

பாலின அடிப்படையிலான வன்முறைக்கு உள்ளாகியவர்கள், குறிப்பாக பெண்கள், பலதரப்பட்ட பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றனர். வன்முறை காரணமாக அவர்கள் வேலை இழக்கவும் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான திறன்களைக் குறைக்கவும் எதிர்பார்க்கின்றனர். இது, சமூகத்தில் வேலை வாய்ப்புகளைப் பாழாக்கி, குறைந்த வருமானத்தை உருவாக்குகின்றது.

**01. வளங்களின் மீறல்:**

குடும்பங்கள் மற்றும் சமூகம் வன்முறையின் பாதிப்புக்குப் பதிலாக பரிதாபம் மற்றும் மாற்றங்களை எதிர்கொள்கின்றன. இந்த மாறுபட்ட பகுதிகள், ஒட்டுமொத்த பொருளாதார வளங்களைக் குறைக்கின்றன. அங்கு சமூக வளர்ச்சியில் சோர்வு ஏற்படுகிறது.

**02. சுகாதாரச் செலவுகள்:**

பாலின அடிப்படையிலான வன்முறையின் சுகாதாரப் பாதிப்புகள் மிகவும் தீவிரமானவை:

**03. உடல்நலப் பாதிப்புகள்:**

வன்முறைக்கு உள்ளாகியவர்கள் உடல் பாதிப்புகளை அனுபவிக்கின்றனர். அது மருத்துவ சேவைகளில் பெரிதும் செலவுகளை உண்டாக்குகின்றது. இது பெண் மற்றும் குழந்தைகள் மற்றும் ஆண்கள் பல்வேறு நெஞ்சுப் பரிதாபம் மற்றும் மன அழுத்தத்துக்கு உட்படுவதாகக் காணப்படுகிறது.

**04. மனநலம் மற்றும் மன அழுத்தம்:**

வன்முறையின் பாதிப்பில், அதிகமாக மன அழுத்தம், மனநல தொல்லைகள் மற்றும் ஆரோக்கியம் குறைந்த செயற்பாடு ஏற்படுகின்றன. இதன் காரணமாக, அதிகமாக மனஅழுத்த மற்றும் மன அழுத்தத்திறன் சிகிச்சைகளுக்கு செலவிட நேரிடுகிறது.

**05. பிற உடல்நல பாதிப்புகள்:**

வன்முறைக்குள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் வாய் அல்லது தசைப் பாதிப்புகள், உடல் அழுக்குகள் மற்றும் மூளை பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு நீண்டகால சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் தேவைப்படுகின்றன.

**03. சமூக நல அமைப்புகளை பாதிக்கும் தாக்கங்கள்:**

பாலின அடிப்படையிலான வன்முறை சமூக நல அமைப்புகளுக்கு பல்வேறு விதங்களில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

**01. சமூக பொறுப்புகளின் குறைவு:**

பாலின அடிப்படையிலான வன்முறைக்குள்ளாகியவர் களுக்கான சேவைகள் மற்றும் ஆதரவுகளுக்கு அதிகமாக உதவி தேவைப்படுகிறது. இதில், சமூகத்தின் உள்ளமைப்புகளுக்கு பெரும் சுமை ஏற்படுகிறது. உடலை அல்லது மனநலத்தைக் காப்பாற்ற பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இது சமூக நல அமைப்புகளுக்கு ஓரளவு பாதிப்பை உண்டாக்குகிறது.

**02. குடும்பப் பொருளாதார பாதிப்பு:**

குடும்பங்களில் வன்முறை இருப்பது குடும்பத் தாழ்வு, உறவுகளின் குழப்பம் மற்றும் குழந்தைகளின் நலன் குறைவுக்கு வழிவகுக்கின்றது. இது குடும்பத்தின் சமூக மற்றும் பொருளாதார நிலையைக் குலைக்கும். குடும்ப உறுப்பினர்களின் வணிக நடவடிக்கைகளுக்கு செல்வாக்கு ஏற்படுவதற்காக சமுதாய அமைப்புகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**03. சமூக ஒற்றுமை குறைவு:**

பாலின அடிப்படையிலான வன்முறையின் காரணமாக சமூகத்தில் நம்பிக்கையின் குறைவு ஏற்படும். இது ஒற்றுமை மற்றும் புரிந்துகொள்ளுதலை பாதிக்கும். இதன் விளைவாக, சமூகத்தில் ஆதரவுக்குழுக்கள் மற்றும் சமூக நல்லிணக்கம் பாதிக்கப்படுகின்றன.

***03. பாலின அடிப்படையிலான வன்முறையில் தொழில்நுட்பமும் சமூக ஊடகங்களும்:***

நவீன தொழில்நுட்பம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தொழில்நுட்ப வளர்ச்சியால் தகவல் தொடர்பு எளிதாகினாலும் அதே நேரத்தில் இது பாலின அடிப்படையிலான வன்முறைக்கு (GBV) புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் மறுக்கப்பட்ட சமூகத்தினருக்கு எதிராக இணையவழி துன்புறுத்தல்கள் தற்போது அதிகரித்துள்ளன.

**01. சைபர் ஸ்டாக்கிங் (Cyberstalking)**

சமூக ஊடகங்கள், மின்னஞ்சல், வட்ஸ்அப் போன்ற மெசேஜிங் பயன்பாடுகள் மூலம் ஒருவர் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவது.

பெண்கள் மற்றும் லிங்கச் சிறுபான்மையினர் இலக்காக மாறுவதுண்டு.

இது மனஅழுத்தத்தையும் உடல் பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் உருவாக்குகிறது.

**02. டாக்சிங் (Doxxing)**

ஒரு நபரின் தனிப்பட்ட தகவல்களை (ஊராட்சி சான்று, தொலைபேசி எண், வீட்டின் முகவரி) சமூக ஊடகங்களில் பகிர்வது.

பாதிக்கப்பட்டவர்கள் தாக்குதலுக்குள்ளாக வாய்ப்புள்ளது.

பல பெண்கள் மற்றும் பெண்களுக்கான சமூக ஆர்வலர்கள் இதன் கொடூரத்துக்குப் பலியாகியுள்ளனர்.

**03. பழிவாங்கும் ஆபாசங்கள் (Revenge Porn)**

முன்னாள் காதலர்கள் அல்லது பழிவாங்க விரும்பும் நபர்கள், இருவரினதும் தனிப்பட்ட புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை இணையத்தில் வெளியிடுவது.

இது சமூக மறுப்பையும் சட்டநடவடிக்கைகளையும் சந்திக்கச் செய்யும்.

பலர் சமூக ஊடகங்களில் தாக்கப்படுவதால் தனிமையில் தள்ளப்படுகிறார்கள்.

**04. ஒன்லைன் துஷ்பிரயோக செயல் (Online Harassment & Trolling)**

பெண்கள் அல்லது லிங்கச் சிறுபான்மையினர் கருத்து தெரிவித்தால் அவர்கள் மீது ஒருங்கிணைந்த சிலுக்குச் செயல் நடைபெறுகிறது.

பெண்கள் மீது பாலியல் அடிப்படையிலான ஆபாசக் கருத்துகள் பரப்பப்படுகின்றன.

சமூக ஊடகக் கணக்குகள் முடக்கப்படவோ அல்லது பாதிக்கப்பட்டவர் சமூக ஊடகத்திலிருந்து விலக வேண்டிய சூழ்நிலையோ ஏற்படுகிறது.

**05. தீங்கிழைக்கும் ஏ.ஐ. (Deepfake Technology)**

செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் பெண்களின் முகத்தை போலி ஆபாச வீடியோக்களில் இணைத்து வெளியிடுவது.

இது அந்தப் பெண்களின் தனிமனித வாழ்க்கையைத் தாக்குகிறது.

இது சமீபத்தில் அரசியல் மற்றும் புகழ்பெற்ற பெண்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டது.

**06. சட்ட நடவடிக்கைகளும் எதிர்ப்பும்**

பல நாடுகளில் சைபர் சட்டங்கள் உள்ளன. ஆனால், பலருக்கும் சட்ட உதவிகளைப் பெறும் அணுகுமுறை இல்லாது போகிறது.

#MeToo போன்ற இயக்கங்கள் சமூக ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புக்காக பல ஒன்லைன் அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

ஒன்லைன் துஷ்பிரயோகத்தைப் புரிந்துகொள்வதும் அதை நிவர்த்தி செய்வதும் முக்கியத்துவமும்

ஒன்லைன் துஷ்பிரயோகத்தால் ஏற்படும் விளைவுகள்

உள்மனையியல் பாதிப்பு – மனஅழுத்தம், பதற்றம், தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு.

சமூகப் பாதிப்பு – பாதிக்கப்பட்டவர்கள் சமூக ஊடகங்களிலிருந்து விலக நேரிடும்.

சட்டநடவடிக்கைகள் – பல நாடுகளில் ஒன்லைன் துஷ்பிரயோகத்துக்கெதிராக சட்டங்கள் உள்ளன. ஆனால், நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

**04. துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ள முக்கிய நடவடிக்கைகள்**

தகவல் பாதுகாப்பு – தனிப்பட்ட தகவல்களை பொதுவில் பகிர்வதை தவிர்க்க வேண்டும்.

கணக்குகளைப் பாதுகாப்பாக வைத்தல் – இரு நிலை உறுதிப்பாடு (2FA) போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

துஷ்பிரயோகத்தை புகாரளித்தல் – சமூக ஊடகங்களில் உள்ள Report & Block அம்சங்களைப் பயன்படுத்துதல்.

சட்ட உதவியை நாடுதல் – சைபர் குற்றங்களுக்கு எதிராக புகாரளிக்க சட்ட அமைப்புகளை அணுகுதல்.

மனநல உதவிகள் – மன அழுத்தத்தை எதிர்கொள்ள உளவியல் ஆலோசனை பெறுதல்.

**05. தொழில்நுட்ப நிறுவனங்களின் பொறுப்பு**

சமூக ஊடகக் கம்பனிகள் – துஷ்பிரயோக நபர்களை தடுக்க விரைவான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தனியார் தரவுப் பாதுகாப்பு – தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க உயர்தர பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குதல்.

எதிர்ப்பு பிரசாரங்கள் – மக்களை விழிப்புணர்வுடன் இருக்க சமூக ஊடகங்கள் மற்றும் அரசு இணைந்து விழிப்புணர்வு இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும்.

***முடிவுரை***

அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மதிப்புடன் கூடிய டிஜிட்டல் சூழலை உருவாக்க, தனிநபர் பாதுகாப்பு, சமூக பொறுப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலையீடு அவசியம். ஒன்லைன் துஷ்பிரயோகத்துக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மட்டும் போதாது – நாகரிகமான டிஜிட்டல் கலாசாரம் அவசியம். தொழில்நுட்பம் சமூக மாற்றத்துக்குப் பயன்படவேண்டும். ஆனால், அது பாலின அடிப்படையிலான வன்முறைக்கு சாதகமாக மாறக்கூடாது. சமூக ஊடக நிறுவனங்கள், சட்ட அமைப்புகள் மற்றும் சமூக இயக்கங்கள் இணைந்து இதனை எதிர்க்க வேண்டும். தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்தும் கலாசாரம் உருவாக வேண்டும். பாலின அடிப்படையிலான வன்முறை, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் சமூக அமைப்புகளுக்கு தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதனால் உண்டாகும் மருத்துவ, சமூக மற்றும் குடும்பச் செலவுகள் பெரும்பாலும் பொதுத்துறையை, அரச மற்றும் தனியார் அமைப்புகளை ஒரு பெரிய சுமையாக்கும். சமுதாயத்தில் இவ்வாறு ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்க, அவர்களுக்கு உரிய ஆதரவுகள் வழங்கப்பட வேண்டும், அதுவே சமூக அமைப்புகளை மீண்டும் நிலைத்துவைக்கும் வழி.



## நக்கல் நமசிவாயம்

தேர்தலுக்கு எதிரா எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடுக்கப் போகுதாம்.. தேர்தல் வையுங்கோ என்று கூப்பாடு போடுறதும் இவங்கதானே..



## தவக்கால சிந்தனை

### நீர் புறப்பட்டுப் போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்



அக்காலத்தில் இயேசு சமாரியாவிலிருந்து கலிலேயாவுக்குச் சென்றார். தம் சொந்த ஊரில் இறைவாக்கினருக்கு மதிப்பு இராது என்று அவரே கூறியிருந்தார். அவர் கலிலேயா வந்தபோது கலிலேயர் அவரை வரவேற்றனர். ஏனெனில், அவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது எருசலேமில் அவர் செய்தவை அனைத்தையும் கண்டிருந்தனர்.கலிலேயாவில் உள்ள கானாவுக்கு இயேசு மீண்டும் சென்றார்.

அங்கேதான் அவர் தண்ணீரைத் திராட்சை இரசம் ஆக்கியிருந்தார். கப்பர்நாகுமில் அரச அலுவலரின் மகன் ஒருவன் நோயுற்றிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட அரச அலுவலர் அவரிடம் சென்று, சாகும் தறுவாயிலிருந்த தம் மகனை நலமாக்க வருமாறு வேண்டினார். இயேசு அவரை நோக்கி, "அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்" – என்றார்.

அரச அலுவலர் இயேசுவிடம், "ஐயா, என் மகன் இறக்குமுன் வாரும்" – என்றார். இயேசு அவரிடம், "நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக்கொள்வான்" – என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார்.

# பாராளுமன்ற வரலாற்றில் அதிக பெண் பிரதிநிதித்துவத்துடன் இலங்கை அடைந்த வெற்றியை மாற்ற அனுமதிக்கக்கூடாது

## மகளிர் தினத்தையொட்டி பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் வலியுறுத்து

''பாராளுமன்ற வரலாற்றில் அதிக பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு முழு இலங்கை சமூகமும் அடைந்த வெற்றியை தலைகீழாக மாற்ற எந்தப் பிற்போக்கு சக்தியையும் அனுமதிக்கக்கூடாது'' எனப் பிரதமர் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய வலியுறுத்தினார்.

மார்ச் 08ஆம் திகதி இடம்பெற்ற மகளிர் தினத்தையொட்டி பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் பாராளுமன்ற வளாகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 13ஆக இருந்ததாகவும் இந்த முறை அந்த எண்ணிக்கை 22ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இது முழு இலங்கை சமூகத்துக்கும் கிடைத்த வெற்றி என்றும் பிரதமர் கூறினார். இந்த வெற்றி தானாக நிகழ்ந்ததல்ல என்றும் இந்த நாட்டில் பெண்கள் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தின் விளைவாக நடந்தது என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன், பெண்கள் அரசியலிலும் நிர்வாகத்திலும் ஈடுபட முடியாது என்ற பரவலான கருத்து தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர், இதுபோன்ற வெற்றியிலும் கூட, கலாசாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பெண்களைத் தாக்கி, இதை ஒரு கலாசாரப் போராக மாற்ற முயற்சிக்கும் குழுக்கள் இருப்பதாகக் கூறினார். அதற்கு எந்த சூழ்நிலையிலும் இடமளிக்க முடியாது. பெற்றுள்ள வெற்றியை பாதுகாப்பதற்கும் மேலும் மேம்படுத்துவதற்கும் உறுதிபூண வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட, பெண்களின் தலைமைத்துவத்துக்கான தடைகளை முறையாக நீக்குவதன்மூலம், அனைவரும் நியாயமாகவும் சமமாகவும் பாதுகாப்பாகவும் வாழக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக பிரதமர் வலியுறுத்தினார். இந்த விடயத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஆற்றும் விசேட பங்களிப்பு தொடர்பில் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவரும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சருமான சரோஜா சாவித்ரி போல்ராஜ் குறிப்பிடுகையில், இந்த வருடம் மகளிர் தினத்துடன் இணைந்து மகளிர் வாரம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய பல திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். அரசியலில் இதுவரை முன்னணிக்கு வராத ஒரு பெரிய குழுவினரின் குரல்கள் இந்த முறை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதாகவும் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு இதை ஒரு உந்து சக்தியாகப் பயன்படுத்துவதே நோக்கமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் குடும்பப் பின்னணியை விட, அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளின் அடிப்படையில் அதிகமான பெண்கள் இம்முறை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது ஒரு தனித்துவமான நிலைமை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், பெண்களின் பாதுகாப்பு உள்ளிட்ட நோக்கங்களுக்காக பத்தாவது பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் சார்ஜன்ட் கைது

*அநுராதபுரம் நிருபர்*

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் நேற்று முன்தினம் (08) கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் தலைமையக பொலிஸ் வளாகத்துக்குள் சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்டை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 170 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் இணைப்பு செய்யப்பட்டு சேவை செய்யும் 38 வயதுடைய நொச்சியாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பொலிஸ் வளாகத்திலுள்ள மலசலகூடத்துக்குள் போதைப்பொருள் அருந்துவதாக கிடைத்த தகவலுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளமை மேலும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக அநுராதபுரம் நீதிமன்றத்தில் விளக்கமறியல் உத்தரவு பெறப்பட்டு, மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியலிலுள்ள பெண்களை வலுப்படுத்தல் - இணையதள பாவனை தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை

*பு.கஜிந்தன்*





மகளிர் தினத்தை முன்னிட்டு கபே அமைப்பு ஏற்பாடு செய்த 'அரசியலில் உள்ள பெண்களை வலுப்படுத்துதல்' மற்றும் இணையதளப் பாவனை தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை யாழில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, ஆரம்பித்து வைத்து அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கும் காட்டார் தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான உதவி பணிப்பாளர் ஷாய்ரா உரையாற்றும்போது, ''பெண்களை அரசியல் ரீதியில் பலப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்குவதற்கு தயாராக இருக்கிறோம்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி, ஜிம்மி காட்டார் மற்றும் அவரது மனைவியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'காட்டார்' நிறுவனம் இலங்கையில் முதற்தடவையாக 'கபே' அமைப்புடன் இணைந்து பெண்களுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்துகிறது.

எமது அமைப்பானது பெண்கள் உரிமை, உலக சமாதானம் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துகின்ற அமைப்பாக விளங்கி வரும் நிலையில் எமது செயற்பாடுகளை இலங்கையிலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்.

பெண்களின் இணையதளப் பாவனை, சமூக ஊடகங்களை கையாளுதல் மற்றும் ஊடக வகிபாகம் தொடர்பில் பயிற்சிப் பட்டறையின்போது பயிற்சிகள் வழங்கப்படும். மேலும் தேர்தல் காலங்களில் செலவுசெய்யப்படும் நிதி தொடர்பான வெளிப்படைத் தன்மை தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். ஆகவே இலங்கையில் முதல் தடவையாக கபே அமைப்புடன் சேர்ந்து பெண்கள் வலுவூட்டல் செயற்பாடுகளில் பங்கெடுத்தமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது'' என அவர் மேலும் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மானஸ் மகீன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபை முன்னாள் பெண் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

# அறிவியல் மேம்பாட்டுச் சங்கத்தினால் பாடசாலை ஆய்வுகூடங்களுக்கான உதவிகள்

வசதி குறைந்த பாடசாலைகளின் ஆய்வுகூடங்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு இலங்கை அறிவியல் மேம்பாட்டுச் சங்கம் ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைய பிரயோக ரீதியான விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளும்போது சவால்களை எதிர்கொண்டுள்ள பாடசாலைகள் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும்.

பிரயோக ரீதியான விஞ்ஞான பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள் இந்த உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் தமது அதிபரின் உறுதிப்படுத்தல் அடங்கிய கடிதத்தினூடாக, தாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களை மார்ச் 30ஆம் திகதிக்கு முன்னதாக, இலங்கை அறிவியல் மேம்பாட்டுச் சங்கத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு (labdonationslaas@gmail.com) அனுப்ப வேண்டும்.

இலங்கை அறிவியல் மேம்பாட்டுச் சங்கத்தின் இவ்வருடத்துக்கான "அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் வசதி குறைவானவர்களை வலுப்படுத்துதல்" எனும் தொனிப்பொருளினூடாக இந்த ஆய்வுகூட உதவித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

# தனியார் பஸ்ஸுடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்து – யுவதியொருவர் பலி



கல்நேவயில் இருந்து அநுராதபுரம் நோக்கிச்சென்ற தனியார் பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பண்டுலகம அரச உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் எப்பாவல கிரலோகம கட்டதிவுல பகுதியைச் சேர்ந்த 20 வயதான சந்தரேகா சுபோதனி ஹேமந்த என்ற யுவதியே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் ஏ28 வீதியில் சிராவஸ்திபுர பஹே எல சந்திக்கு அருகில் 79 மற்றும் 80ஆவது மைல் கல் பகுதிக்கு இடையில் தனது தந்தையுடன் பாடநெறி ஒன்றில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் (08) சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையும் மகளும் தலாவயிலிருந்து அநுராதபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த தனியார் பஸ் மோட்டார் சைக்கிளின் மீது மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயத்துக்குள்ளான இவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோது இவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

கல்நேவ தொரநோகம பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

# மீளமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் இம்மாதம் 26 மக்கள் பாவனைக்காக திறப்பு

நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளுடன் மீளமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் எதிர்வரும் 26ஆம் திகதி மக்கள் பாவனைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் குறைபாடுகளுடன் செயற்பட்ட அரசாங்கத்தின் தொழிற்சாலைகளில் உப்பு உற்பத்தியின்போது அயடின் சேர்க்கும் தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடனான நவீன மயப்படுத்தப்பட்ட இவ்வானையிறவு தொழிற்சாலை ஊடாக 26ஆம் திகதியிலிருந்து நுகர்வுக்காக உப்பு சந்தைக்கு அனுப்பப்படும்.



# பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மின் கட்டணத்தை குறைக்க சூரிய மின் தகடுகள் பொருத்தி தேசிய மின் அமைப்பில் இணைப்பு

*(எம்.அமீனுல்லா)*

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாதாந்த மின்சாரக் கட்டணமான 440 இலட்சம் ரூபாவை 50% குறைப்பதற்கான முதற்கட்டமாக இன்று (10) மருத்துவ, பொறியியல் மற்றும் கலைப்பீட கட்டிடங்களின் கூரைகளில் சூரிய மின் தகடுகள் (solar Panels) பொருத்தப்பட்டு தேசிய மின் அமைப்பில் இணைக்கப்படவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் மின்சார விநியோகத்தை முழுமையாக சூரியசக்தி மூலம் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

பொறியியல், கலை மற்றும் மருத்துவ பீட வளாகங்களில் நிறுவப்படும் சூரிய சக்தி அமைப்புகள் வெயில் காலநிலையில் தினமும் சுமார் 6000 கிலோவோட் மணிநேரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதற்கட்டமாக பொறியியல் பீடத்தில் இரண்டு சூரிய சக்தி அமைப்புகளும் கலை பீடத்தில் மற்றுமொரு சூரிய சக்தி அமைப்பும் நிறுவப்பட்டுள்ளன.

பொறியியல் பீடத்தில் நிறுவப்பட்ட இரண்டு அமைப்புகளும் 820 கிலோவோட் மணிநேர உற்பத்தி திறன் கொண்டவை. கலை பீடத்தில் நிறுவப்பட்ட சூரிய சக்தி அமைப்பின் உற்பத்தி திறன் 380 கிலோவோட் மணிநேரம் ஆகும்.

இதன்படி, 1,200 கிலோவோட் மணிநேரத்தை மின்சக்தி அமைப்பில் சேர்க்க எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் மாதாந்திர மின் நுகர்வு 500,000 யூனிட்கள் ஆகும். சூரிய மின்சக்தி அமைப்பை நிறுவுவதன் மூலம், 1,200 கிலோவோட் மணிநேரத்தை கணினியில் சேர்ப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தின் மொத்த மின் நுகர்வில் 36% ஈடுசெய்ய முடியும்.

இத்திட்டத்தின் கீழ், மருத்துவ பீடத்தில் தற்போது மற்றுமொரு பகுதி நிறுவப்பட்டு வருவதாகவும் அதனை கூடிய விரைவில் அமைப்பில் இணைப்பதற்கு நம்பிக்கை உள்ளதாகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

இது மேலும் 300 கிலோவோட் மணிநேர திறனை கட்டத்துக்கு சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அமைப்பில் ஒருமுறை சேர்க்கப்பட்டால், பல்கலைக்கழகத்தின் மொத்த மின் நுகர்வில் 45% வரை இது ஈடுசெய்யும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




நீங்கள் ஸஹர் செய்யுங்கள் நிச்சயமாக ஸஹர் உணவில் அதிகமான பரகத் (அபிவிருத்தி) இருக்கின்றது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(புகாரி.முஸ்லிம்)

இரவின் கடைசி நேரத்தையே ஸஹருடைய நேரமாக கொள்ளப்படுகின்றது. அதாவது சுபஹ் அதான் கேட்பதற்கு முன்னர் ஏதாவது உட்கொண்டு விட்டு நோன்பு நோற்பதே சுன்னத்தாகும். அத்துடன் வேதக்காரர்களின் நோன்புக்கும் எமது நோன்புக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் ஸஹர் செய்வதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நாமும் ஸஹர் நேரத்தில் சாப்பிட்டு நோன்பு நோற்பதன் மூலம் அதன் பரகத்தை அடைந்துகொள்வோம்.

(தொழுகை நேரங்கள்)
(10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை)

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.04 |
| சூரிய உதயம் | - | 6.20 |
| ழுஹர் | - | 12.22 |
| அஸர் | - | 3.38 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

# வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | வாகன வகை | தயாரிப்பு வகை |
|---|---|---|---|
| KO - 6XXX | MAT612221BKC18947 | MOTOR CAR | TATA NANO |
| CAO - 7XXX | JN1TENT32Z0000060 | MOTOR CAR | NISSAN XTRAIL |
| GO - 3XXX | GA41043531 | MOTOR CAR | HONDA CAPA |
| GS - 0XXX | A33-005535 | MOTOR CAR | NISSAN CEFIRO |
| LE - 6XXX | LVBV3JBB27E003564 | MOTOR CAR | FOTON BJ1036V-3JB3-R |
| 18 - 7XXX | KLATF19T1RB478065 | MOTOR CAR | DAEWOO RACER |
| KC - 3XXX | MAT6032526PR45563 | MOTOR CAR | TATA INDIGO MARINA GLX |
| 15 - 0XXX | JHMCA45300C105212 | MOTOR CAR | HONDA ACCORD |
| 47 - 1XXX | NKR58E7222051 | MOTOR CAR | ISUZU NKR58E |
| 300 - 0XXX | K11-189274 | MOTOR CAR | NISSAN MARCH K11 |
| 13 - 0XXX | A142V-0012855 | MOTOR CAR | MITSUBISHI LANCER |
| 14 - 2XXX | AA60-0093601 | MOTOR CAR | TOYOTA CARINA |
| WP-HP - 4XXX | TA5P401566 | MOTOR CAR | MAZDA MILLENIA |
| 50 - 0XXX | LH30V-366061 | MOTOR VAN | TOYOTA HIACE |
| 60 - 1XXX | LH30V-368460 | MOTOR VAN | TOYOTA LH30V |
| 20 - 1XXX | L031P5772197 | MOTOR VAN | MITSUBISHI L300 DELICA |
| DAD - 1XXX | MAT524004GSR00776 | SINGLE CAB | TATA XENONLIGHT TRUCK |
| LD - 4XXX | MA1ST2DHC72A13460 | SINGLE CAB | MAHINDRA BOLERO PICKUP |
| 226 - 7XXX | G2H41006536 | MOTOR LORRY | NISSAN G2H41 |
| SG-GB - 7XXX | CBE-449031 | MOTOR LORRY | LANKA ASHOK LEAYLAND COMET |
| PS - 5XXX | MAT483141CYR00830 | MINI TRUCK | TATA SUPPER ACE |
| DAH - 2XXX | MAT483173KYH21924 | MINI TRUCK | TATA SUPER ACE |
| DAC - 3XXX | MA1KD2UBKF3K80106 | MINI TRUCK | MAHINDRA JEETO X7 |
| PX - 0XXX | MA1FA2HRRE6A26923 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| PV - 4XXX | MAT491006DJR06071 | MINI TRUCK | TATA ACE ZIP |
| PR - 7XXX | MA1FA2HRRB6K18863 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| DAD - 0XXX | MBX0001LBPG239635 | MINI TRUCK | PIAGGIO APE TRUCK PLUS |
| DAC - 5XXX | MAT491011F6R19309 | MINI TRUCK | TATA ACE ZIP |
| PX - 2XXX | LVAV1JAB5DE389422 | MINI TRUCK | FOTON BJ1010V0JA3-2 |
| PY - 0XXX | MA1FA2HRRE6F20344 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| PX - 7XXX | LGHT1A173D9817040 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| PX - 5XXX | MAT491006DJR17496 | MINI TRUCK | TATA ACE ZIP |
| PX - 09XX | LGHT1A174D9817855 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| 227 - 8XXX | SD2AT-503468 | MINI TRUCK | MAZDA BROWNY |
| PR - 5XXX | MA1FA2HRRB6J14283 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| PX - 26XX | MA1FA2HRRE6A28613 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| PW - 7XXX | MA1F2HRRD6H25549 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| NW-PY - 6XXX | LVAV1JAB6DE386142 | MINI TRUCK | FOTON BJ1010V0JA3 2 |
| CP-PV - 8XXX | MA1FA2HRRD6C28554 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| NC-PQ - 7XXX | LNYADDA188KJ28005 | MINI TRUCK | YUEJIN NJ1020DU |
| CP-DAE - 6XXX | LVAV1JAB7FE399744 | MINI TRUCK | FOTON BJ1008V0JA32 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2025 மார்ச் 10, 11ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. மார்ச் 12ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2025 மார்ச் 12ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

**முகாமையாளர்,**

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**

வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT

www.thamilan.lk
திங்கட்கிழமை மார்ச் 10, 2025
தமிழன்

# அன்பைத் தடுக்கும் கைபேசி!



நம் முன்னோர்கள் அன்பும் அறனும் நிறைந்த நிறைவான வாழ்க்கையை வாழ்ந்தனர். ஆனால், தற்போது நாம் அன்பையும் மறந்து அறவழிப்பாதையையும் துறந்து வெற்று மானுடர்களாக வாழ்கிறோம். நம்மில் பலர் வெற்று மானுடர்களாக வாழ்வதால்தான் வெற்றியும் பெற இயலவில்லை.

முதலில் நாம் அன்பை மறந்ததற்குரிய காரணங்களைக் காண்போம். ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ - என்றார் வள்ளலார். இதன்மூலம் உலக உயிர்களிடத்தில் அன்பு கொண்டவர்கள் நாம் என்கிற செய்தி மெய்யாகிறது. உலக உயிர்களிடத்தில் அன்பு கொண்ட நாம், தற்போது உற்றார், உறவினர்களிடம் கூட மெய்யான அன்பைக் கொள்ளவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. போலியான அன்பைக் கொண்ட பொம்மைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

அன்பை அடைக்க கைபேசியால் முடியுமென்று நிகழ்காலம் நமக்கு உணர்த்துகிறது. கைபேசியில் மூழ்கிய நாம் அன்பு பாராட்டுவதை எம்மை அறியாமலேயே குறைத்துக் கொள்கிறோம். கைபேசி அன்பை அடைத்து, நற்பண்புகளையும் உடைத்து பேராபத்து விளைவிக்கும் இருமுனைக் கத்தியாக உள்ளது. நிகழ்காலத்தினர் இதனைக் கையில் எடுத்துக் காயத்தை ஏற்கத் தயாராகவும் உள்ளனர்.

ஒரே அறையில் குடும்பத்தினர் ஒன்றாகவே இருந்தாலும் கைபேசியின் மூலம் அயல் மனிதர்களாகவே இருக்கிறார்கள். உரையாடல் குறைந்ததால் உள்ளங்கள் இணைவதும் குறைந்தது. பேசும் திறனற்ற உயிர்களிடத்திலும் அன்பு கொண்ட நாம், காலப்போக்கில் பேசும் திறனையே மறந்து ஊமையாகும் அபாயத்தில் உள்ளோம்.

‘எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே’ என்பது திரைப்படப் பாடல். ஆனால், அண்மைக்காலமாக அன்னையின் கைகளையும் கைபேசியே ஆள்கிறது. குழந்தைக்கு உணவு ஊட்டுவதிலிருந்து தாலாட்டுப்பாடி உறங்க வைக்கும்வரை கைபேசியின் துணையையே நாடுகின்றனர். குழந்தையை மறந்து கைபேசியில் மூழ்கிய சில பெற்றோருக்கு அக்குழந்தையையே இழக்கும் துயரமும் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

பாடசாலைகளிலிருந்து வரும் பிள்ளைகளும் அலுவலகத்திலிருந்து வரும் பெற்றோர்களும் கைபேசி, தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் மெகாதொடர் என வீட்டில் இருக்கும் அனைவருமே தொழில்நுட்பத்தில் தொலைந்துபோய்விடுகிறார்கள். பின்பு உரையாடல்கள்கூட ஒழுங்காக இல்லாமல் போய்விடுகிறது. இவ்விடத்தில்தான் வள்ளுவர், ‘‘அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று’’- என்று நமக்கு நினைவுபடுத்துகிறார்.

அடிமைத்தனம் இருக்கும் இடத்தில் அன்பு இருக்காது என்பதை அறிந்து அடிமைத்தனத்திலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும். அடுத்ததாக, நாம் அறவழிப் பாதையிலிருந்து தடம் புரண்டதற்குக் காரணம் நம் அறியாமையே. இன்று நாம் அறவழிப் பாதையிலிருந்து தடம்புரள்வதற்குக் காரணம் கைபேசியே. முன்பு பெரும்பாலான மக்கள் விழிப்பாக இருந்தனர். ஆனால், அண்மைக்காலமாக மாணவர்களும் ஏன் ஆசிரியர்களும்கூட செயற்கை நுண்ணறிவின் உதவியை நாடுவது அதிகரித்துள்ளது. இதை ஆக்கபூர்வமாகவும் நாம் பயன்படுத்தலாம். என்றாலும் நம்மில் பலர் ஒரு கேள்வியைக் கேட்டு அது கூறும் பதிலை அறிவு கொண்டு ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம் என்பதுதான் உண்மை.

நாம் அதிக நேரத்தைக் கைபேசியில் செலவிடுவதால் மற்ற வேலைகளில் எம்மால் ஈடுபட முடிவதில்லை. இதில் உண்பதும் உறங்குவதும் கூட அடங்கும். இளைஞர்கள் கைபேசிக்கு அடிமையாகி உள்ளதாகக் கூறும் அதிர்ச்சிகரமான புள்ளிவிபரங்களை நாம் புறந்தள்ளிவிட முடியாது. தற்போது இந்த வலையில் அனைவரும் சிக்கத் தொடங்கிவிட்டனர். இப்படி ஒரு மோசமான நிலையில் நம்மால் சமூகச் சிக்கல்களை எப்படிக் களைய முடியும்? இப்படி மதியிழந்திருப்பதால் நமக்கு அறம் என்றால் என்ன என்பதே தெரியாமல் போய்விடுகிறது. இளைஞர்களைக் கண்டித்து திருத்தும் இடத்திலிருக்கும் பெற்றோர்களும் சமூக வலைத்தளம் என்னும் இவ்வலையில் சிக்கிக்கொண்டதால் சீர்திருத்த மக்களின்றித் தவிக்கும் நிலைதான் தற்போது உள்ளது.

அன்பையும் குறைத்து அறத்தையும் மறக்க வைக்கும் இந்தக் கைபேசியைத் திறம்படக் கையாள்வது மிகவும் முக்கியமானதாகும். இதில் சமூகத்தின் எதிர்காலம் அடங்கியுள்ளதை ஆட்சியாளர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். நேர்மறையான மாற்றங்களைச் சமூகத்தில் கொண்டுவர வேண்டும். மாற்றம் என்பதை நம்மிடமிருந்து தொடங்குவோம். குறிப்பிட்ட நேரத்தை கைபேசிக்காக ஒதுக்குவோம். அந்த நேரத்திலும் அதனை மதியைத் தீட்டப் பயன்படுத்துவோம். ஆக்கபூர்வமான செயல்களுக்கும் அன்பைப் பகிர்வதற்கும் தனி நேரம் ஒதுக்குவோம். திறன்பேசி நம்மைத் திறனற்ற நபர்களாக மாற்றுவதற்கு நமது நேரத்தை அதில் வீணாக்க வேண்டாம். நம்முள் புதைந்திருக்கும் அன்பையும் அறவாழ்வையும் மீட்போம் என உறுதி கொள்வோம்.

**- தோ. லட்சுமி நரசிம்மன்**



# உடல் பருமன்: தினசரி சமையலில் எந்த எண்ணெய், எவ்வளவு சேர்க்க வேண்டும்?

முன்பெல்லாம் உடல் பருமன் என்பது மேற்கத்தேய நாடுகளில் மட்டும்தான் பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. ஆனால், சமீப ஆண்டுகளாக நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளிலும் இது பிரச்சினையாக மாறியுள்ளது.

**ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது என்ன?**

“ஓர் ஆய்வின்படி, எட்டுப் பேரில் ஒருவர் உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த சில ஆண்டுகளில் உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது.

“குழந்தைகள் மத்தியில் உடல் பருமன் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. உலக சுகாதார



ஸ்தாபன தரவுகளின்படி, 2022இல் உலகளவில் சுமார் 250 கோடி பேர் உடல் எடை அதிகமாக உள்ளனர். அதாவது, சரியான எடையை விட அவர்கள் அதிக எடையுடன் உள்ளனர்.

**எண்ணெய் எப்படி பங்காற்றுகிறது?**

நொறுக்குத் தீனிகள் மற்றும் உடல் உழைப்பில்லாத வாழ்வியல் முறை போன்றவை உடல் பருமன் பிரச்சினைக்கு முக்கிய காரணங்களாக பெரும்பாலும் கூறப்படுகின்றன. ஆனால், நம்முடைய உணவில் நாள் முழுவதும் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணெய் உடல் பருமனை அதிகரிப்பது குறித்து புறந்தள்ளிவிடுகிறோம்.

அனைத்து இந்திய மேம்பட்ட ஆய்வு மற்றும் உடல் பருமன் சங்கத்தின் தலைவர் டாக்டர் மகேந்திர நர்வாரியா,

“உணவில் கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் எண்ணெய் ஆகியவை அதிகளவில் உள்ளன. எந்தவொரு உணவையும் சுவையானதாக மாற்ற எண்ணெய் மற்றும் நெய் பயன்படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக, நமது உடலில் கொழுப்பு அதிகமாகிறது. நாம் அதிகமாக உடற்பயிற்சி செய்யாததால் உடலில் உள்ள கொழுப்பு கரைவதில்லை’’ - என்கிறார்.

மேலும், நம் உணவில் அதிகமாக கார்போஹைட்ரேட்டுகள் உள்ளன. இவை உடலில் நுழைந்ததும் கொழுப்பாக மாறுகின்றன. மேலும், கொழுப்பும் நம் உடலில் சேருகிறது. இதனால் உடல் பருமன் அதிகரிப்பதற்கான ஆபத்து ஏற்படுகிறது.

நமது உடலில் கொழுப்பின் அளவு எப்போதும் அதிகமாக இருக்கும். உடல் மெலிந்த நிலையில் ஒருவர் இருந்தாலும் அவருடைய உடலிலும் 30-40% கொழுப்பு இருக்கும். அதுவே மிக அதிகம். மற்றொருபுறம், விளையாட்டு வீரர்களின் உடலில் 7-8% கொழுப்பு இருக்கும்.

நமது உடலில் கொழுப்பு அதிகமாக இருந்தால், நம்முடைய வளர்சிதை மாற்றம் குறையும். இதனால், நமது உடல் எடை அதிகமாகும் என்றார்.

டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் தலைமை உணவியல் நிபுணர் டாக்டர் பர்மீத் கௌர் கூறுகையில்,

“பரிந்துரைக்கப்பட்ட அளவை விட



அதிகமாக எண்ணெயை எடுத்துக்கொண்டால், நம்முடைய வளர்சிதை மாற்றம் குறையும். இதனால், நம் உடலில் கொழுப்பு அதிகரித்து, உடல் பருமனும் அதிகமாகும். மேலும், இது நமக்கு நார்ச்சத்து, தேவையான விற்றமின்கள் மற்றும் தாதுக்களை தராமல், கூடுதல் கலோரிகளையே தரும்” - என்றார்.

மும்பையில் உள்ள வோக்ஹார்ட் மருத்துவமனையின் பேரியாட்ரிக் (உடல் பருமனுக்கான சிகிச்சை) அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராமன் கோயல்,

“எண்ணெயில் பொதுவாகவே கொழுப்பு அதிகமாக இருக்கும். நமது உடல் பெரும்பாலான கலோரிகளை கொழுப்பிலிருந்து தான் பெறும். புரதச் சத்திலிருந்து 04 கலோரிகளைப் பெற்றால், கொழுப்பிலிருந்து 09 கலோரிகளை நாம் பெறுவோம். எனவே, அதிகமான கலோரிகளுடன் நாம் உண்ணும் எதுவாக இருந்தாலும், உடல் பருமனுக்கு வழிவகுக்கும். குறிப்பாக ஏற்கனவே உடல் பருமனாக உள்ளவர்களுக்கு எடை மேலும் அதிகமாகும்” - எனத் தெரிவித்தார்.

**தினசரி சமையலில் எண்ணெய் எவ்வளவு சேர்க்க வேண்டும்?**

எண்ணெய்யை குறைவாக உபயோகிப்பதன் மூலம் உடல் பருமனைக் கட்டுப்படுத்த முடியுமென்கிறார் டாக்டர் மகேந்திர நர்வாரியா. அதிகளவு எண்ணெய்யை மக்கள் பயன்படுத்துவதால், உடலில் கொழுப்பின் அளவு அதிகரிக்கிறது.

டாக்டர் பர்மீத் கௌர் கூறுகையில், “நம் உடலில் கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின்களான ஏ, டி, இ, கே ஆகிய விற்றமின்களை ஜீரணிக்க கொழுப்பு நமக்கு உதவுகிறது. எனவே, நம் உடலுக்கு குறிப்பிட்ட அளவு கொழுப்பு தேவை” - என்றார்.

மேலும், “வயதுக்கேற்ப மக்கள் எண்ணெய்யை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதிக உடலுழைப்பு இல்லாத ஒருவர் ஒரு நாளைக்கு 4-5 தேக்கரண்டி எண்ணெய்தான் எடுக்க வேண்டும். அதாவது, ஒரு நாளைக்கு 20-25 கிராம் எண்ணெய். இதுவே ஒருவருக்கு அதிகமான அளவுதான்” - எனக் கூறுகிறார்.

எனினும், உடல் பருமனுக்கு எண்ணெய் மட்டுமே காரணமல்ல. டாக்டர் ராமன் கோயல் கூறுகையில், “உடல் பருமனுக்கு பல காரணங்கள் உள்ளன. இனிப்புகளும் உடல் பருமனை அதிகரிக்கும்” - என்றார்.

அவரைப் பொறுத்தவரை, பொரிப்பதற்கு பயன்படுத்திய எண்ணெய்யை நாம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடாது. மேலும், ஓரளவு ஹைட்ரஜனேற்றப்பட்ட தாவர எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களையும் நாம் தவிர்க்க வேண்டும்.

மேலும், எண்ணெயின் தரமும் முக்கியமானது. சமையல் எண்ணெயை நாம் அதிகமாக சூடுபடுத்துவது உடலுக்கு நல்லதல்ல.



ஏற்கனவே பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டுமென உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம் கூறுகிறது. ஏனெனில், அந்த எண்ணெயில் கெட்ட கொழுப்புகள் (trans fat) அதிகமாக இருக்கும்.

ஹார்வர்ட் பொதுச் சுகாதாரப் பாடசாலையின் இணையதளத்தில், இத்தகைய கெட்ட கொழுப்புகள் உடலுக்கு மோசமானவை எனக் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய கொழுப்புகள் எல்.டி.எல் போன்ற தீய கொழுப்புகளை அதிகரித்து எச்.டி.எல் போன்ற நல்ல கொழுப்புகளைக் குறைக்கும். இதனால், உடலில் வீக்கம் அதிகரித்து, இதய நோய், பக்கவாதம், டைப் 2 நீரிழிவு நோய், இன்சுலின் எதிர்ப்பு, நோயெதிர்ப்பு ஆகியவற்றைப் பாதிக்கும்.

*நன்றி - பி.பி.சி.*

# வெளிநாட்டு தபால் பொதி சேவை தொடர்பில் தெளிவூட்டும் ஊர்வலம்




(செங்கலடி செய்தியாளர்)

இலங்கை தபால் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விரைவான வெளிநாட்டு தபால் பொதி சேவை (EMS) தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு தெளிவூட்டும் ஊர்வலம் சனிக்கிழமை (08) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்.ஜெகன் தலைமையில் பிரதம தபால் அத்தியட்சகர் எம்.ஜெயரெட்னத்தின் வழிகாட்டலில் வெளிநாட்டு தபால் பொதி சேவை தொடர்பான அறிமுக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிரதம தபாலக உத்தியோகத்தர்கள் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக மட்டக்களப்பு காந்தி பூங்கா வரை சென்று பொதுமக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் துண்டுப்பிரசுரங்களை வழங்கி புதிய வெளிநாட்டு தபால்பொதி சேவை தொடர்பான தகவல்களையும் வழங்கினர்.

இருநூறு வருடங்களுக்கும் மேலாக தபால் சேவையை வழங்கிவரும் இலங்கைத் தபால் திணைக்களமானது தமது சேவையின் நவீனத்துவத்தைக் கருத்திற்கொண்டு பல புதிய சேவைகளை அறிமுகம் செய்து வருகிறது. அந்தவகையில், தற்போது விரைவான வெளிநாட்டு தபால் பொதி சேவையை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 21 தபாலகங்களிலும் 66 உப தபாலகங்களிலும் இச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# தமிழ் இளைஞர்கள் இனத்துக்காக ஒன்றுதிரண்டு பயணிப்பதன் மூலமே உரிமையை பெறமுடியும்




(செங்கலடி செய்தியாளர்)

அரச பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு விடயத்திலும் அரசியல் பதவிகளிலும் தகுதியான ஆளுமையுள்ள தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மை சமூகத்தினரை பதவிகளுக்கு அமர்த்தும் நடவடிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வருகிறதென இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

தமிழ் மக்கள் அரசியல் அதிகாரம் இல்லாமல் தனித்துவிடப்பட்டுள்ளார்கள். எமது இளைஞர்கள் தமிழ் இனத்துக்காக ஒன்றுதிரண்டு தமிழ்த் தேசியத்தின் பால் பயணிப்பதன் மூலமே எமக்கான உரிமையைப் பெறமுடியும். தமிழ் மக்களுக்கு தங்கள் மண்ணிலே தங்களைத் தாங்களே ஆளும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு கிடைக்கும்போது எமது மக்களுக்குரிய அபிவிருத்தியை நாங்களே மேற்கொள்ள முடியுமென்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு கொம்மாந்துறை ஒருமுழச்சோலை ஜீனியஸ் விளையாட்டுக் கழகத்தின் பிரீமியர் லீக்கின் ஆரம்ப நிகழ்வு கழகத் தலைவர் ஜீவரெத்தினம் ஜெகதீபன் தலைமையில் சனிக்கிழமை (08) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் சமூகம் தலைநிமிர்ந்ததாக திராணியுடன் வாழ்வதற்கு இளைஞர்கள் வலுவுடன் இருக்க வேண்டும். இதற்காக விளையாட்டுகள் மிகவும் அவசியமாகும். விளையாட்டுகள் மூலமாக நாம் தலைமைத்துவப் பண்பு, வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள முடியும். எமது நாட்டில் எதிர்கால சூழ்நிலை எவ்வாறு அமையுமென்பதை ஒருபோதும் கணிப்பிட முடியாது. முன்பு யுத்தசூழல் காணப்பட்டது. தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு மொழி, கலாசாரம் என்பவற்றில் நெருக்கடியான சூழலைச் சந்தித்திருந்தார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் இனவாதம் பேசப்படாது எனக் கூறப்பட்டாலும் எமது இனத்துக்கான அங்கீகாரம், அபிவிருத்தி, எதிர்காலம், எமது கலாசார உறுதிப்பாடு ஒரு பராமுகப்படுத்தப்பட்ட நிலையே காணப்படுகிறது.

போதைப்பொருள் பிரச்சினை சமூக வலைத்தளங்களூடாக இளைஞர், யுவதிகளை தவறான பாதையில் இட்டுச்சென்று வலுவிழந்தவர்களாக மாற்றுகின்ற நிலைமை உருவாகியுள்ளது. புதிய அரசாங்கத்தின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் குறிப்பிட்டுக்கூறக்கூடிய வகையில் இருந்திருக்கவில்லை. கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலிருந்து பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட விடயத்தில்கூட தமிழ் சமூகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு விடயங்களிலும் அரசியல் பதவிகளிலும் தகுதியான ஆளுமையுள்ள தமிழர்களைப் புறக்கணித்து தங்களின் தலையாட்டிகளை பதவிகளில் அமர்த்த வேண்டுமென்பதை பெரும்பான்மை சமூகம் சூட்சுமமானமுறையில் திட்டமிட்டு செயற்படுத்தி வருகிறது. இதனை எமது இளைஞர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

எமது அரசியல் பொருளாதார மற்றும் நில அதிகாரங்களுக்காக எந்தவித உறுதிப்பாடும் இல்லாமல் தமிழ் சமூகம் தனித்துவிடப்பட்டுள்ள நிலையில், எமது இளைஞர்கள் எமது இனத்துக்காக ஒன்றுதிரண்டு தமிழ்த் தேசியத்தின் பால் பயணிக்க வேண்டும். விளையாட்டுக் கழகங்கள் தமது விளையாட்டுச் செயற்பாடுகளுக்கப்பால் ஆளுமையுள்ள சமூகத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இந்த முயற்சிக்கு நான் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராகவுள்ளேன்" - என்றார்.



மட்டக்களப்பு மறைமாவட்ட தவக்கால முயற்சி இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் நடத்திய இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) திரு. இருதயநாதர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. ஆலய பங்குத் தந்தை அருட்பணி சி.வி.அன்னதாஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் வைத்தியர் க.விவேகானந்தநாதன், இரத்தவங்கி ஊழியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.
(கல்லடி செய்தியாளர்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொத்துவில் தொகுதி தேர்தல் முகவராக பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை கட்சியின் செயலாளரான நிசாம் காரியப்பரால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் ஒலுவில் தனியார் விடுதியில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி. சமால்தீன் மற்றும் முன்னாள் அதிபர் எம்.ஏ.அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர். (திகாமடுல்ல செய்தியாளர்)

# சாய்ந்தமருதில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கைகள் அண்மையில் (06) முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது வைத்தியசாலை வீதியில் டெங்கு நோயாளியாக இனங்காணப்பட்டவரின் வீட்டில் களப் பரிசோதனை மேற்கொண்டு அவ்வீட்டின் சுற்றுச்சூழலை அவதானித்ததன் பின்னர் அங்கு டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் காணப்பட்டமையால் அவ்வீட்டின் உரிமையாளருக்கெதிராக வழக்குத்தாக்கலும் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

இதனையடுத்து அவ்வீதியிலுள்ள 20 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன. இந்த டெங்கு தடுப்பு களப்பணிகளில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் பொதுமக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சோஷலிச இளைஞர் அமைப்பால் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் முன்னெடுப்பு



(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் சோஷலிச இளைஞர் அணியால் ஏற்பாடு செய்யப்பட்ட கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் திருகோணமலை கருமலையூற்று கடற்கரையில் நேற்று(09) இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியால் இளைஞர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நேற்று இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் சோஷலிச இளைஞரணித் தலைவர் டபிள்யூ.பி. நிரோஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோசான் அக்மீன மற்றும் பிரதி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அஷ்ரப் இம்ரான் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸார் குடியிருப்பாளர்களின் விபரம் திரட்டுவதற்கான விண்ணப்பப்படிவங்களை வீடுவீடாகச் சென்று வழங்கும் நடவடிக்கையை சனிக்கிழமை (08)முதல் ஆரம்பித்துள்ளனர்.

இதையடுத்து இச்சம்பவமானது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

1865ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆம் பிரிவுக்கமைய வீடுகளில் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கியிருப்போரின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தலைப்பிலான இந்த விண்ணப்பப்படிவம் மட்டக்களப்பு நகரிலுள்ள பகுதிகளில் வீடுவீடாக பொலிஸார் சென்று வழங்கிவருகின்றனர்.

இந்தப் பொலிஸ் பதிவு மீண்டும் ஆரம்பித்ததையடுத்து மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளதுடன் கடந்த 2016ஆம் ஆண்டுக்கு பிற்பாடு மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. பொலிஸ் பிரிவுகளில் நால்வர் தூக்கிட்டு தற்கொலை

(மண்டூர் செய்தியாளர்)

வெல்லாவெளி, வவுணதீவு, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுகளில் நான்கு பேர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கடந்த நாட்களில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டூர், பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய ஜீவராசா திலக்சன், பாவக்கொடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58வயதுடைய சாமித்தம்பி முத்துலிங்கம், பாரதிபுரம் எருவில் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஜெயக்குமார் ராகுலன் மற்றும் மட்டக்களப்பு இருதயபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 02 பிள்ளைகளின் தாயாரான புவனேஸ்வரன் ராஜேஸ்வரி என்பவர்களே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவர்களாவர்.

வீட்டுத் தகராறு, உடல் நோய், மனநோய், காதல் பிரச்சினை என பல காரணங்களினாலேயே இவ்வாறு குறித்த நபர்கள் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

வெல்லாவெளி, வவுணதீவு, மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் வேண்டுதல் மற்றும் களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலங்களைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார்.

சம்பவங்கள் பற்றிய மேலதிக விசாரணைகளை குறித்த பிரதேச பொலிஸார் மேற்கொண்டனர்.

# பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு



(சீனக்குடா செய்தியாளர்)

மகளிர் விவகார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய கிண்ணியா பிரதேச செயலகத்தால் ஒருவார காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த சர்வதேச மகளிர் தினத்தின் இறுதி நிகழ்வுகள் சனிக்கிழமை(08) இடம்பெற்றன.

கிண்ணியா பிரதேச மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச செயலக கேட்பார் கூடத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான 2025 ஆம் ஆண்டின் சிறப்பு பெண்மணிகளாக கிராம சேவகர் பிரிவு ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 17 பேர் சான்றுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் இந்த ஆண்டு பெண்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் பங்களிப்பாற்றிய கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, கிண்ணியா பிரதேச செயலகத்தின் சிறப்பு பெண் அபிவிருத்தி உத்தியோகத்தராகத் தெரிவுசெய்யப்பட்ட ஏ.எம்.சித்தி சமீனா, கிண்ணியா பிரதேச செயலக ரீதியாக சிறப்பு தொழில் முனைவோராக எகுத்தார் நகர் கிராம சேவைப் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட எம்.கே.கனிஷா பர்வீன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், பிரதேச செயலகத்தில் சிறப்பாகக் கடமையாற்றிய பெண் ஊழியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில், சட்டத்தரணி திருமதி பாத்திமா முனாஸிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு 'சட்டமும் பெண்களும்' என்ற தலைப்பில் விசேட உரை நிகழ்த்தினார். இங்கு பெண்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பகிரங்க ஏல விற்பனை

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2025 மார்ச் மாதம் 25 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

# திருடிய முச்சக்கரவண்டியை பயன்படுத்தி கொள்ளை –போதைப்பொருள் கடத்தல்

## சந்தேகநபர்கள் இருவருக்கு விளக்கமறியல்

(ஹனபி.எம்.தாஸீம்)

திருடப்பட்ட முச்சக்கரவண்டியைப் பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு ஐஸ் போதைப்பொருட்களைக் கொண்டுசென்ற தம்பதியினர் கைதுசெய்யப்பட்டு மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்களை அடையாள அணிவகுப்புக்காக இந்த மாதம் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் (08) நீதவான் உத்தரவிட்டார்.

மினுவங்கொட, பன்சில்கொட பிரதேசத்தைச் சேர்ந்த ஓர் ஆணும் உக்குவெல, தர்மபால மாவத்தையைச் சேர்ந்த பெண்ணொருவருமே இவ்வாறு அடையாள அணிவகுப்புக்கு ஆஜர்படுத்துவதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட முச்சக்கரவண்டியில் ஐஸ் போதைப்பொருட்களைக் கொண்டுசென்றபோது களனி பிரிவு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை (07) கைதுசெய்யப்பட்ட தம்பதியினர், மேலதிக விசாரணைக்காக கிரிபத்கொட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 07ஆம் திகதி களனி பிரிவு குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு-கண்டி வீதியில் ஜீப்பில் பயணித்துக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில், ஈரியவெட்டிய சாலையிலிருந்து கொழும்பு-கண்டி பிரதான சாலைக்கு வந்த ஒரு முச்சக்கரவண்டி கிரிபத்கொட நகரிலிருந்து கொழும்பு நோக்கித் திரும்ப முயன்றது. முச்சக்கரவண்டியின் மீது சந்தேகம் கொண்ட பொலிஸ் அதிகாரிகள், அதனை நிறுத்தினர்.

அதேநேரத்தில், முச்சக்கரவண்டியை சோதனையிட்டபோது, பின் இருக்கையில் இருந்த சந்தேக நபரிடமிருந்து 2,830 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. பின்னர், முச்சக்கரவண்டியை ஓட்டிச்சென்ற சந்தேகநபர் அணிந்திருந்த காற்சட்டையின் பாக்கெட்டிலிருந்து 3,610 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

பின்னர் சந்தேக நபர் தம்பதியினர் முச்சக்கரவண்டியுடன் கைதுசெய்யப்பட்டனர். விசாரணையில் அந்த முச்சக்கரவண்டி களனி பகுதியிலிருந்து திருடப்பட்ட முச்சக்கரவண்டி என்பது தெரியவந்துள்ளது. தம்பதியினரை மேலும் விசாரித்தபோது, அவர்கள் அதே முச்சக்கரவண்டியில் மற்றொரு நபருடன் கிரிபத்கொட தேசிய வீட்டுவசதித் திட்டப் பகுதிக்குச் சென்று, சாலையோரத்தில் உள்ள பூ மரத்தில் பூ பறித்துக் கொண்டிருந்த ஒருவரின் கழுத்திலிருந்த சுமார் ஆறரை இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்கச் சங்கிலி மற்றும் தங்கப் பதக்கத்தையும் (பென்டன்) கொள்ளையடித்துள்ளனர்.

தங்கப் பொருட்களைக் கொள்ளையர்கள் அடகு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மற்றொரு சந்தேக நபரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை கவனத்தில் கொண்ட பதில் நீதவான், சந்தேகநபர்களை இந்த மாதம் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# மதுவரியை உயர்த்தும் முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி





மதுவரியை உயர்த்துவதற்கு நிதி அமைச்சு முன்வைத்த முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியது. அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் 2025/01 மதுவரி அறிவிப்பு, 1988ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் கட்டளை, 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 112ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி என்பன குறித்து இக்குழுவில் கலந்துரையாடப்பட்டன.

இதற்கமைய, 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழான கட்டளை மற்றும் (52ஆவது அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான 2025/01 மதுவரி அறிவிப்பு என்பனவும் குழுவில் கவனத்தில் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அதிகாரிகள், 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழான கட்டளையினூடாக மோட்டார் வாகனம், சிகரெட், குளிர்பானம் மற்றும் புகையிலை உள்ளிட்ட ரூபாவின் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி வரியின் கீழ் சகல பொருட்களுக்குமான உற்பத்தி வரியை 5.9% அதிகரிப்பதற்கு இடமளிக்கின்றது என்றனர். மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் 2025/01 மதுவரி அறிவிப்பு கீழ் மதுபானங்கள் மீதான மதுவரியை 5.9% இனால் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த குழுத் தலைவர், உரிய தரவுகள் இல்லாமல் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரி அதிகரிக்கப்படுவதை அங்கீகரிக்க முடியாதென்றும் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், சிகரெட்டுகளுக்கான வரியை அதிகரிப்பது தொடர்பில் நடத்தப்பட்ட மதிப்பாய்வுகளுக்கமைய, வரி அதிகரிப்பால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் அதிகரிக்காது என்றும் நிறுவனத்துக்குக் கிடைக்கும் வருமானமே அதிகரிக்குமென்றும் கூறினார். இதற்கமைய, இந்த வரி அதிகரிப்பால் அரசாங்கம் எவ்வாறு பயனடையுமென்பது குறித்த நியாயப்படுத்தல்களை அதிகாரிகள் குழுவுக்கு வழங்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். அரசாங்க நிதி பற்றிய குழுவின் அடுத்த கூட்டத்தில் நிதியமைச்சின் அதிகாரிகள் இது குறித்த விளக்கத்தை வழங்கவேண்டுமென்றும் 1988ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3ஆவது பிரிவின் கீழ் கட்டளையை அன்றையதினம் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவும் குழு தீர்மானித்தது.

மேலும், (52ஆவது அத்தியாயம்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான 2025/01 மதுவரி அறிவிப்பின் மூலம் மதுபானங்கள் மீதான மதுவரியை அதிகரிக்கும் முன்மொழிவு குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த குழு உறுப்பினர்கள், இந்த வரி அதிகரிப்பின் மூலம் தனிநபர்கள் சட்டவிரோத மதுபானங்களைப் பயன்படுத்துவதற்கும் உற்பத்தி செய்வதற்கும் வாய்ப்புள்ளதென்பதை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதற்குப் பதிலளித்த அதிகாரிகள், சட்டவிரோத மதுபான உற்பத்தியைத் தடுப்பதற்கான சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனைகள் முறையாக நடத்தப்பட்டு வருவதாகக் கூறினர்.

இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் நாட்டில் மதுபான உற்பத்தி 22% அதிகரித்திருப்பதுடன் வருமானம் 23% அதிகரித்துள்ளதென்றும் தெரிவித்தனர். சட்டவிரோத மதுபான பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் புதிய வகை மதுபானத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# இ.தொ.காவும் தொழிலாளர் தேசிய சங்கமும் மலையக மக்களின் உரிமைகளுக்காகவே குரல் கொடுத்தன

## பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு





(பொகவந்தலாவை நிருபர்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தொழிலாளர் தேசிய சங்கமும் இதுவரை காலமும் மலையக மக்களுக்காகக் குரல் கொடுத்த ஓர் அமைப்பு என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் செனன் கே.எம். தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஸ்ரீதரன், இளைஞர் அணித் தலைவர் பா.சிவநேசன், பிரதிப் பொதுச்செயலாளர் கல்யாணகுமார் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம், ''கடந்த காலங்களிலும் மக்களுக்காகவே நாங்கள் இருதரப்பினரும் முரண்பட்டுக் கொண்டோம். தேசிய கட்சிகளுக்கு கட்டுப்பாடு உள்ளது. அதனை மீறி செயற்பட முடியாது. நாமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மக்களுக்கு சேவைகளை முன்னெடுத்திருக்கின்றோம். ஆனால், புதிதாக வந்த கட்சிகள் மக்களுக்கு எதுவும் செய்ததில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து போட்டியிடுவதற்கு கலந்துரையாடிக்கொண்டிருக்கின்றோம். வெளிமாவட்டங்களில் தனித்துப் போட்டியிட பேசிக்கொண்டிருக்கின்றோம். எமது கட்சியில் எவ்வித பிளவுகளும் இல்லை. நான் இராதாகிருஷ்ணன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் இணைந்துதான் செயற்படுவோம்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவே பேசி வருகிறோம். எனக்கும் ஜீவன் தொண்டமானுக்கும் சொந்தப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. எமது ஆட்சிக் காலத்தில் காணி உரிமை முதல் காணி உறுதிப்பத்திரம் வரை பெற்றுக்கொடுத்துள்ளோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா பெற்றுத்தருவதாக ரணில் விக்கிரமசிங்க கூறி, அது கிடைக்கவில்லை. ஒவ்வொரு முறையும் சம்பளப் பிரச்சினை இழுபறி நிலையில் உள்ளது. ஆகையால்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதே எமது நிலைப்பாடாக உள்ளது.

பொகவந்தலாவை, மஸ்கெலியா போன்ற தூரப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு கடந்த காலங்களில் மிக தொலைவிலே பிரதேச செயலகங்கள் காணப்பட்டன. அதனை இலகுபடுத்துவதற்காகவே நாம் எமது அரசாங்கத்தில் பிரதேச செயலகங்களையும் பிரதேச சபைகளையும் அதிகரித்தோம். இந்த மக்கள் பிரதேச சபையைக் கைப்பற்ற எமக்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால், மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ளார்கள். இருந்தாலும் பொறுத்திருந்து பார்ப்போம்''- என்றார்.

# நீர்கொழும்பில் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள பீடி இலைகளுடன் சந்தேக நபர் கைது



(நீர்கொழும்பு நிருபர்)

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் ஒரு கோடியே 27 இலட்சம் ரூபா மதிப்புள்ள 2,350 கிலோ பீடி இலைகளை ஏற்றிய லொறியொன்றை நீர்கொழும்பு, குட்டிதூவ சிறைச்சாலைக்குப் பின்னால் உள்ள கடற்கரை அருகில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியதுடன், சந்தேக நபரொருவரையும் நேற்று முன்தினம் (08) கைதுசெய்துள்ளனர்.

நீர்கொழும்பு, கடோல்கலே, தலாதுவ பிரதேசத்தில் வசிக்கும் அலென்சு குட்டிகே சிங்க தீப்த சனீ பெர்னாண்டோ என்ற கட்டிட ஒப்பந்தக்காரர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசோக தர்மசேனவின் வழிகாட்டலில் பிராந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதனையடுத்து சந்தேகநபரை மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தங்க முலாம் பூசப்பட்ட நாணயங்களை விற்பனைசெய்ய முயன்ற இருவர் கைது


(அநுராதபுரம் நிருபர்

புதையல் மூலம் எடுக்கப்பட்ட தங்க நாணயங்கள் எனக் கூறி தங்க மூலாம் பூசப்பட்ட போலி நாணயங்கள் சிலவற்றை ஏழு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகைக்கு விற்பனைசெய்ய முயன்ற சந்தேக நபர்கள் இருவரை அநுராதபுரம் வலயக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வலயக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் நுவரவெவ பகுதியில் நேற்று முன்தினம் (08) நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளதுடன், போலியான தங்கமூலாம் பூசப்பட்ட நாணயங்களையும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 37, 42 வயதுடைய அநுராதபுரம் கல்கடவள பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலயக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக இதுவரை 168 வேட்பு மனுக்கள் தாக்கல்



2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இதுவரை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உள்ளடங்கலாக 168 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டுப்பணத்தை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை கடந்த 03 ஆம் திகதி தொடங்கிய நிலையில், வெள்ளிக்கிழமை (07) மாலை 4.15 மணிவரை 168 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த 168 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 18 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 57 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் தகுதிபெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# வெல்லவாய பஸ் நிலையத்தில் அடையாளம் காணப்படாத சடலம் மீட்பு

(எம்.ஏ.எம்.ஹசனார்)

வெல்லவாய பஸ் நிலையத்தில் அடையாளம் காணப்படாத சடலம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

வெல்லவாய பஸ் நிலையத்தில் பின்புறத்தில் அடையாளம் காண முடியாத சடலம் ஒன்றை நேற்று முன்தினம் (08) கண்டெடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், குறித்த நபர் நகரங்களில் பல்வேறு பகுதிகளில் யாசகம் செய்பவர் எனவும் தெரிவித்தனர்.

இவர் தொடர்பான விபரங்களை வெல்லவாய பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தருமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்கின்ற அதேவேளை, குறித்த யாசகரின் சடலம் வெல்லவாய பொது வைத்தியசாலை சவச்சாலையில் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் 10 வருடங்களுக்கு பிறகு கைது

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம், கல்கிரியாகம பகுதியிலுள்ள சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை பத்து வருடங்களுக்குப் பின்னர் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் கலேவல பகுதியிலுள்ள புகையிலை செய்கை பண்ணும் தோட்டமொன்றில் தலைமறைவாக இருந்தபோது குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வெள்ளிக்கிழமை(07) மாலை சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 39 வயதுடைய அநுராதபுரம் கல்கிரியாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவரென்பது தெரியவந்துள்ளது.

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில் கல்கிரியாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தில் அவர் ஆஜராகாததையடுத்து, நீதிமன்றப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு கல்கிரியாகம பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் சந்தேக நபரைக் கைதுசெய்ய முடியாமல் போனதையடுத்து குறித்த விசாரணை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வந்த தீவிர விசாரணைகளின் பின்னணியில் சந்ததேக நபரை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபருக்கு தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் அவர் பற்றிய விபரங்களை அறிந்துகொள்வதற்கு விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாருக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன், அதனை சாதகமாகப் பயன்படுத்தி சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்துள்ளார் என்பது மேலதிக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நேற்று முன்தினம் (08) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யூடியூபர் கிருஷ்ணாவை மடக்கிப்பிடித்த பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

SK Vlog என்ற பெயரில், உதவிசெய்கின்ற காணொளிகளை பதிவேற்றம் செய்யும் யூடியூப் சேனல் ஒன்றை நடத்தி வருகின்ற கிருஷ்ணா என்பவர் பண்டத்தரிப்பு மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த யூடியூபர் பெண் பிள்ளைகளை அவமானப்படுத்துவது போன்று பேசி காணொளிகளை பதிவேற்றி வந்த நிலையில், அந்த விடயம் சர்ச்சையாகியிருந்தது. இந்த விடயம் குறித்து பாராளுமன்றத்திலும் பேசப்பட்டது. அந்த வகையில் பல்வேறு தரப்பினரும் குறித்த யூடியூபருக்கு எதிராக கருத்தை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில், சர்ச்சையான காணொளியில் உள்ள குடும்பத்தின் வீட்டுக்கு நேற்று (09) குறித்த யூடியூபர் வந்திருந்த நேரம் ஊரவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## 2024 நிதியாண்டை பெருமளவு இலாபத்துடன் நிறைவு செய்துள்ள SLT குழுமம்



2024 டிசம்பர் மாத நிறைவில் SLT குழுமம் இலாபகரத்தன்மையில் பெரும் அதிகரிப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. உறுதியான தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் நிலையான மற்றும் மொபைல் பிரிவுகளில் வெற்றிகரமான செலவு மேம்படுத்தல்கள் போன்றவற்றுடன் வருடம் முழுவதிலும் மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை இந்தப் பெறுபேறுகளில் பாரிய பங்களிப்புச் செலுத்தியிருந்ததாக அறிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் குழுமம் ரூ. 3.1 பில்லியனை வரிக்கு பிந்திய இலாபமாக (PAT) பதிவு செய்திருந்தது, 2023 ஆம் ஆண்டில் ரூ. 3.9 பில்லியன் நட்டமாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனூடாக ரூ. 7 பில்லியன் எனும் பாரிய வருமான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. 2024 ஆம் ஆண்டில் குழுமத்தின் வருடாந்த வருமானம் 4.4% இனால் அதிகரித்து ரூ. 111.1 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய இலாபம் 19.6% இனால் உயர்ந்து ரூ. 46.1 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

செயற்பாட்டு வினைத்திறனில் குழுமம் மேலதிக கவனம் செலுத்தியிருந்ததனூடாக செயற்பாட்டு செலவுகள் 4% குறைந்து ரூ. 71.2 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. இது EBITDA இல் 23.7% முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கி அந்தப் பெறுமதியை ரூ. 40 பில்லியனாகப் பதிவுசெய்திருந்தது. அதேபோன்று, செயற்பாட்டு இலாபம் 172.8% எனும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எய்தி ரூ. 11.2 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

## NDB பிரத்தியேக வாடிக்கையாளர் ஒன்றுகூடல்



NDB வங்கியானது அண்மையில் யாழ்ப்பாணம், நோர்த் கேட் ஹோட்டலில் வாடிக்கையாளர் ஒன்றுகூடல் வைபவத்தை வெற்றிகரமாக நடத்தியது. இந்தப் பிரத்தியேக நிகழ்வானது, வங்கியின் உயர்மட்ட வாடிக்கையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் [SME, S] மற்றும் ஆர்வமுள்ள ஏற்றுமதியாளர்கள் உட்பட 100 அழைப்பாளர்களை ஒன்றிணைத்ததுடன் இதன்மூலம் அவர்களுக்கு வலையமைப்பு, கற்றல் மற்றும் வளர்ச்சிக்கான ஒரு சக்தி வாய்ந்த தளத்தை வழங்கியது. வட பிராந்திய வாடிக்கையாளர்களுடனான தனது உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த மன்றத்தில் NDB இன் சிரேஷ்ட தலைமைக் குழுவின் முக்கிய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

இதில் பிரதம நிறைவேற்று அதிகாரி கெலும் எதிரிசிங்க, தனிப்பட்ட வங்கியியல் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தின் சிரேஷ்ட பிரதித் தலைவர் - சஞ்சய பெரேரா, வர்த்தக வங்கியியலின் பிரதித் தலைவர் - இந்திக ரணவீர, சில்லறை வர்த்தக வங்கியியலின் பிரதித் தலைவர் சியான் ஹமீத் மற்றும் பிரதித் தலைவர், பிரதம இடர் அதிகாரி அலெக்ஸ் பெரேரா ஆகியோர் அடங்குவர்.

இந்த ஒன்றுகூடலானது பெறுமதிமிக்க வலையமைப்புக்கான வாய்ப்புகளை வழங்கியதுடன், ஒரு விரிவான விழிப்புணர்வு அமர்வையும் கொண்டிருந்தது.

## பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கைகொடுக்கும் Sunshine Foundation for Good





Sunshine Holdings PLCஇன் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பிரிவான Sunshine Foundation for Good (SFG) பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் பரிசுக் கூப்பன்களை (Vouchers) வெற்றிகரமாக விநியோகிப்பதன் மூலம் கல்விக்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

இந்த ஆண்டு முன்முயற்சியின் ஊடாக Sunshine Holdingsஇன் செயற்பாட்டுப் பிரிவுகளுக்கு அருகிலுள்ள கடவத்தை, களனி, இரத்மலானை, முகத்துவாரம் மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 640 மாணவ மாணவிகள் பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்களுக்கு முதலாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பரிசுக் கூப்பன்கள் (Vouchers) விநியோகிக்கப்பட்டன. இதில் ஆரம்ப மற்றும் மேல்நிலைப் பாடசாலைகள் பயன்பெற்றுள்ளன. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த இந்தப் பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் புதிய கல்வி ஆண்டுக்கு நம்பிக்கைக்குரிய தொடக்கத்தை உறுதி செய்வதற்காகவும் பாடசாலை உபகரணங்கள், வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

## சர்வதேச மகளிர் தினத்தில் 'கரத்திற்கு வலிமை' பெண் தொழில்முனைவோருக்கு உலகத்தை திறக்கும் தீவா



Hemas Consumer Brands இன் முதன்மையான சலவை வர்த்தகநாமமான தீவா, சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் விதமாக, தீவா கரத்திற்கு வலிமை பெண் தொழில்முனைவோருக்கான ஒன்லைன் சந்தையை அறிமுகப்படுத்தி, உலகத்தை அவர்களுக்குத் திறந்து வைத்துள்ளது. தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம், நாடு முழுவதுமுள்ள பெண் தொழில்முனைவோரை மேம்படுத்தி வரும் நிலையில், இந்தத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள ஒன்லைன் சந்தையானது ஒரு முக்கிய முயற்சியாகும். இந்த ஒன்லைன் சந்தையை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் வகையில், இந்த ஒன்லைன் சந்தை மூலம் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ள, தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோரின் முக்கிய பயணத்தையும் அவர்களது வெற்றியையும் கௌரவிக்கும் வகையில் ஒரு விசேட நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வு, பெண் தொழில்முனைவோரின் ஈடுகொடுக்கும் தன்மை, வளர்ச்சி மற்றும் சாதனைகளை எடுத்துக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், பிராந்திய ரீதியிலிருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களுக்கு அவர்களது வணிகங்களின் விரிவாக்கத்தை ஏற்படுத்த உதவுகின்றது.

## கூரை சூரிய மின்சக்தித் துறையை பாதுகாக்க சூரிய மின்சக்தித் தொழில்கள் சங்கம் வலியுறுத்து

இலங்கையின் கூரை சூரிய மின்சக்தித் துறையை நியாயமற்ற கூற்றுகள் மற்றும் நிலையற்ற கட்டணங்களிலிருந்து பாதுகாக்க நியாயமான கொள்கைகளை சூரிய மின்சக்தித் தொழில்கள் சங்கம் (SIA) வலியுறுத்துகிறது. இலங்கையின் கூரை சூரிய மின்சக்தித் துறையில் 1,000க்கும் மேற்பட்ட நிறுவனங்களையும் 40,000 தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சூரிய மின்சக்தித் தொழில்கள் சங்கம் (SIA), தொழில்துறையின் எதிர்காலத்தையும் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளையும் அச்சுறுத்தும் சமீபத்திய முன்னேற்றங்களை கடுமையாகக் கண்டிக்கிறது.

சமீபத்திய தீவு முழுவதும் ஏற்பட்ட மின்வெட்டுக்கு கூரை சூரிய மின்சக்தி நிறுவல்கள் தான் காரணம் என்ற இலங்கை மின்சார வாரியத்தின் (CEB) கூற்றை சூரிய மின்சக்தித் தொழில்கள் சங்கம் திட்டவட்டமாக மறுக்கிறது. இந்தக் கூற்று தவறானது மற்றும் தவறாக வழிநடத்துகிறது. இந்தச் சம்பவம் குறித்து வெளிப்படையான மற்றும் சமநிலையான விசாரணையை நடத்த அமைச்சகம் அல்லது இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையத்தால் (PUCSL) நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன நிபுணர் குழுவை நாங்கள் கோருகிறோம். CEBயின் ஒருதலைப்பட்ச குற்றச்சாட்டுகள் பொதுமக்களின் நம்பிக்கையை



சிதைத்து பொறுப்பைத் தவறாக வழிநடத்துகின்றன. கட்டணத் திருத்தங்கள் பரந்த நன்மைகளை அங்கீகரிக்க வேண்டும். கட்டண நிர்ணயக் குழுவை நியமித்ததை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அதே நேரத்தில் எங்கள் துறை வழங்கும் பரந்த பொருளாதார மற்றும் சமூக நன்மைகளைப் புறக்கணித்து அது கட்டண மாதிரி அளவுருக்களில் மட்டுமே கவனஞ்செலுத்துகிறது என்பதில் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

**மேலாடை சூரிய சக்தி:**

ஒரு சில நிறுவனங்களுக்கு மட்டுமே பயனளிக்கும் பெரிய அளவிலான திட்டங்களைப் போலல்லாமல், கூரை சூரிய சக்தி அனைத்து குடிமக்களையும் எரிசக்தி உற்பத்தியாளர்களாக மாற்ற அதிகாரமளிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஓய்வுபெற்ற குடிமக்கள் தங்கள் EPF ஐ கூரை சூரிய சக்தியில் முதலீடு செய்யலாம். தேசிய எரிசக்தி இலக்குகளுக்கு பங்களிக்கும் அதே வேளையில் வருமானத்தையும் ஈட்டலாம்.

**ஒரு நம்பகமான மற்றும் விரைவான தீர்வு:**

நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் மற்றும் நிதித் தடைகள் காரணமாக தாமதங்களை எதிர்கொள்ளும் பெரியளவிலான திட்டங்களைப் போலல்லாமல் மேலாடை சூரிய சக்தி விரைவாகப் பயன்படுத்தக்கூடியது. 2024 ஆம் ஆண்டில் மட்டும் எங்கள் துறை 500 மெகாவோட் மின்சாரத்தை மின் கட்டமைப்பில் சேர்த்தது. இது தேசிய தேவையில் 5% ஐக் குறிக்கிறது. பெரிய அளவிலான திட்டங்களை இவ்வளவு குறுகிய காலத்தில் பூர்த்தி செய்வது கடினமான சாதனை.

**நிலையான வளர்ச்சிக்கான வேண்டுகோள்:**

பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அவசியமாக இருந்தாலும், கூரை சூரிய சக்தி தனித்துவமான நன்மைகளை வழங்குகிறது. திறமையான நிலப் பயன்பாடு, கட்டிட நிலைத்தன்மை, சமூக பங்கேற்பு மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி இதில் அடங்கும்.

## புத்தக வெளியீட்டு நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் பங்கேற்பு









சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஹசித குருப்பு எழுதிய 'தினு மினிசெகுட செவனெல்லக்' புத்தக வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் (08) இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அரசியல்வாதிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அவரது பாரியார் திருமதி ஜலனி பிரேமதாச ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 'வனமெல்லாம் புதிர்' நூல் அறிமுக நிகழ்வு

2024ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் புனைகதைக்கான சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற, ஜனகா நீக்கிலாஸ் எழுதிய 'வனமெல்லாம் புதிர்' நூலின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நூலின் முதற் பிரதியை யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பெற்றுக்கொண்டதுடன், நூல் அறிமுக உரைகளை யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் படைப்பாளியும் சமூக செயற்பாட்டாளருமான வெற்றிச் செல்வி (சந்திரகலா) ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு நடைபெற்ற இந்நிகழ்வில், போர்க்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் மங்கள விளக்குக்குப் பிரதியீடாக குப்பி விளக்குகள் ஏற்றப்பட்டதானது பலரதும் கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# சிரியாவில் வெடித்த உள்நாட்டு கலவரம்: 02 நாட்களில் 1,000 பேர் பலி



சிரியாவில் 02 நாட்களாக நடந்த உள்நாட்டு கலவரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில், 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் இடம்பெற்று வருகிறது. அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பஷர் அல் - அஸாத், ரஷ்யா மற்றும் ஈரானுக்கு ஆதரவாக செயற்பட்டதால் அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகள் அவருக்கெதிராக உள்நாட்டு கிளர்ச்சி படைகளை தூண்டிவிட்டன. ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளதால், சிரியாவுக்கு அவர்களால் உதவ முடியவில்லை.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி துருக்கி ஆதரவுடன் புதிதாக உருவான கிளர்ச்சிப்படை முழுவீச்சில் தாக்குதலில் இறங்கியது. தலைநகர் டமாஸ்கஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை கைப்பற்றியது. இதனால் ஜனாதிபதி பஷர் அல்-அஸாத் ரஷ்யாவுக்கு சென்று தஞ்சமடைந்தார். கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த அஹ்மத் அல்-ஷரா, சிரியாவின் இடைக்கால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.


ஆனால், சிரியாவின் கடலோர நகரங்கள் இன்னும் அஸாத் விசுவாசிகளின் கட்டுப்பாட்டிலுள்ளன. அங்கு அரசு படையினருக்கும் அஸாத்தின் விசுவாசிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பல கிராமங்களில் புகுந்து அரசு படையினர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்கு ஆயுதமேந்திய அஸாத் விசுவாசிகள் பதிலடி கொடுத்தனர்.

02 நாட்களாக நடந்த உள்நாட்டு கலவரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களில் 745 பேர் பொதுமக்கள், 125 பேர் பாதுகாப்புப் படையினர், 148 பேர் அஸாத் ஆதரவாளர்கள் என்பதை சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் உறுதி செய்துள்ளது.

# விடைபெறுகிறார் ஜஸ்டின் ட்ரூடோ



## கனடாவின் புதிய பிரதமராக மார்க் கர்னி தெரிவு



கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகவுள்ள நிலையில் அந்நாட்டின் புதிய பிரதமராக மார்க் கர்னி (Mark Carney) (வயது 59) அடுத்த பிரதமராக தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவுக்கு எதிராக ட்ரம்ப் வர்த்தக போர் அறிவித்துள்ள இந்நேரத்தில் அதை சமாளிக்கும் வகையில் மார்க் கார்னி செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 'கனேடிய மக்களை ஒருபோதும் கைவிடமாட்டேன்' என்று ஜஸ்டின் ட்ரூடோ உருக்கமாக உரையாற்றியுள்ளார். புதிய பிரதமரை லிபரல் கட்சி அறிவிக்கவுள்ள நிலையிலேயே தனது கடைசி உரையில் ட்ரூடோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பதவி விலகுவதற்கு முன் செய்தியாளர்களை சந்தித்து தனது இறுதி உரையை நிகழ்த்தியுள்ளார். இதன்போது, கனேடிய மக்களை ஒருபோதும் கைவிட மாட்டேன் என்று உருக்கமாக பேசியுள்ளார் ட்ரூடோ.

பிரதமர் அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும் நான் கனேடிய மக்களை முதன்மைப்படுத்தி, அவர்களுக்காக உழைத்தேன். மக்களின் ஆதரவு எனக்கு இருக்கிறது என்பதை உறுதிசெய்துள்ளேன். மக்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்பதை உறுதியாக சொல்கிறேன் எனவும் ஜஸ்டின் ட்ரூடோ மேலும் தெரிவித்துள்ளார்.

# உக்ரைனுடனான போர்நிறுத்தத்துக்கு தயார்

## நிபந்தனைகளுடன் சம்மதம் தெரிவித்தார் ரஷ்ய ஜனாதிபதி புட்டின்



அமெரிக்கா, உக்ரைன் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நாளை (11) சவூதியில் நடைபெறவுள்ளநிலையில், உக்ரைனுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் போர் நிறுத்தத்துக்கு, தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

நேட்டா அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்தது. இப்போர் இன்று (10) 1,110ஆவது நாளாகவும் நீடிக்கிறது.

இந்நிலையில் உக்ரைன் மற்றும் ரஷ்ய போர் நிறுத்தம் தொடர்பாக, வெள்ளை மாளிகையில், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நடத்திய பேச்சு, வாக்குவாதத்தில் முடிந்தது.

இதையடுத்து, உக்ரைனுக்கான இராணுவ உதவிகளை அமெரிக்கா அதிரடியாக நிறுத்தியது. தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கு ரஷ்யா முன்வர வேண்டும் என, ட்ரம்ப் வெள்ளிக்கிழமை (07) தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், உக்ரைனுடன் குறுகியகால தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கு தயாராக இருப்பதாகவும் அதற்கான பேச்சுக்கு தயார் என்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

அந்த போர் நிறுத்த ஒப்பந்தம், அமைதிக்கான இறுதித் தீர்வை நோக்கிச் செல்வதாக இருக்க வேண்டும் என்றும் புட்டின் நிபந்தனை விதித்துள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறுதிப் போர் நிறுத்த ஒப்பந்த விதிகளில் தெளிவான புரிதல் இருக்க வேண்டும். அமைதி பணிகளில் எந்தெந்த நாடுகள் பங்கு வகிக்கும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் புட்டின் நிபந்தனை விதித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா, உக்ரைன் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு, சவூதியில் நாளை (11) நடைபெறவுள்ளது. அப்போது புட்டின் தெரிவித்த போர் நிறுத்த ஒப்பந்த நிபந்தனைகள் குறித்தும் பேசப்படும் என தெரிகிறது.

**உக்ரைன்மீது ரஷ்யா வான் தாக்குதல்**

இந்நிலையில் உக்ரைனின் டொனட்ஸ்க், கார்கிவ் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்யா வெள்ளிக்கிழமை (07) நள்ளிரவு முதல் சனிக்கிழமை அதிகாலை வரை மிகக் கடுமையான வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காஸா விற்பனைக்கு அல்ல!






## ட்ரம்ப்பின் கோல்ப் மைதானத்துக்குள் புகுந்து பலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை

காஸாவை கைப்பற்றினால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் சொத்துகள் சூறையாடப்படும் என பலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், காஸா போர் குறித்து பேசுகையில், ''ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசமுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று கூறியதோடு, காஸாவை கைப்பற்றி அதனை மத்திய கிழக்கின் சுற்றுலாத் தளமாக மாற்றுவோம்'' என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில், ட்ரம்ப்பின் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஸ்கொட்லாந்தில் அவருக்கு சொந்தமான கோல்ப் மைதானத்துக்குள் புகுந்த பலஸ்தீன குழுவினர் சிலர், அங்குள்ள புல்வெளி பகுதியில், ''காஸா விற்பனைக்கு இல்லை'' என்று பிரமாண்டமாக எழுதி வைத்துள்ளனர்.


மேலும், ''கோல்ப் மைதானம் முழுவதும் குழிகள் தோண்டடப்பட்டும் ட்ரம்ப் காஸாவை தனது சொத்தாக கருத முயற்சித்தால், அவரது சொந்த சொத்து தங்களால் சூறையாடப்படும்'' எனவும் பலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக ஸ்கொட்லாந்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



### சொகுசு கடுகதிக்கு பதிலாக குறைந்த வசதிகள் கொண்ட ரயில் சேவை:

# பயணிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

## உடனடி தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை





(கலஹா செய்தியார்)

நீண்டகாலமாக கண்டி-கொழும்புக்கிடையேயான சேவையில் ஈடுபட்டு வந்த சொகுசு கடுகதி (இன்டர்சிட்டி) ரயில் சேவைக்கு மாற்றீடாக குறைந்த வசதிகள் மற்றும் குறைந்த வேகமுடைய ரயில் சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் சரியான நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள முடியாத அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அண்மையில் (07) பயணிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை ரயிலுக்குள் மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளனர். அதன்போது தெரிவித்ததாவது,

மேற்குறிப்பிட்ட ரயில் தினமும் காலை 6.15 மணிக்கு கண்டியிலிருந்தும் மாலை 3.35 மணிக்கு கொழும்பிலிருந்தும் புறப்படுகின்றது. மேற்படி ரயிலில் தினமும் மருத்துவர்கள், சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள், ஊழியர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் என அனைவரும் வழமையாகப் பயணிக்கின்றனர்.

நவீன வசதிகள் கொண்ட S-14 என்ற ரயிலே இதுவரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவந்த நிலையில் குறித்த ரயில்சேவை வேறு பாதைக்கு மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக குறைந்த வசதிகள் கொண்ட S -12 ரயில்சேவை தற்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

முன்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ரயில் சரியான நேரத்தில் கொழும்பைச் சென்றடைந்ததால் மக்கள் தமது பணிகளை சிறப்பாகத் தொடர்ந்து வந்ததாகவும் தற்போதைய ரயில் சுமார் ஒரு மணித்தியாலயத்துக்கு மேல் காலதாமதமாகுவதால் தொழில் ரீதியாக பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



முதல் வகுப்பில் சில பெட்டிகளில் குளிரூட்டல் வசதி கூட இல்லை. குறித்த ரயிலில் மேலும் சுகாதார வசதிகளும் மோசமான நிலையிலுள்ளன. பல பெட்டிகளில் இருக்கைகள் கிழிந்து காணப்படுவதால் அமர்வதற்கு முடியாமல் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

சரியான தண்ணீர் வசதி இல்லாததால் கழிப்பறைகள் துர்நாற்றம் வீசுவதாகவும் இருக்கை ஒதுக்கீடு முதல் பல பிரச்சினைகள் காணப்படுவதாகவும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பயணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலும், பேராதனை ரயில் நிலையத்தில் மேடை தாழ்வாக அமைந்துள்ளமையால் பயணிகள் ரயிலில் ஏறவும் இறங்கவும் சிரமப்படுவதாகவும் இதனால் பெண்கள், முதியவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் உள்ளிட்ட ஏராளமானோர் பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளதாகவும் ரயிலில் இறங்க முயற்சிக்கும் சந்தர்ப்பங்களில் வழுக்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த ரயிலில் தொடர்ந்தும் 30 வருடங்களுக்கு மேலாகப் பயணித்துவரும் 400 பயணிகள் இணைந்து இப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி, ஜனாதிபதி, போக்குவரத்து அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோதிலும், யாரும் இதுவரை பதிலளிக்கவில்லையென்றும் மக்கள் குற்றஞ்சுமத்துவதோடு உடனடியாக மேற்படி பிரச்சினைக்குத் தீர்வைப்பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நுவரெலியாவில் ஈ.எம்.எஸ். விரைவுத் தபால் மூலம் பொதி விநியோகம் அறிமுகம்





(செ.திவாகரன் டி.சந்ரு)

இலங்கை தபால் திணைக்களம் வெளிநாட்டுக்கு பொதிகளை விநியோகம் செய்யும் புதிய ஈ.எம்.எஸ். முறைமையை நாடளாவிய ரீதியில் அறிமுகம் செய்து வருகிறது. அதனடிப்படையில் நுவரெலியா தபால் அலுவலகத்திலும் நேற்று முன்தினம் (08) ஈ.எம்.எஸ். பரிமாற்ற செயற்பாட்டை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

இதன் முதற்கட்டமாக நுவரெலியா தபால் அலுவலகத்தில் தொழில்புரியும் ஊழியர்கள் இணைந்து நுவரெலியா பிரதான நகர் முழுவதிலும் பொதுமக்களுக்கு தெளிவூட்டல் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

மேலும், சர்வதேச பொதிகள் அனுப்பும் சேவையை வழங்குவது குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

தற்போது இலங்கை உள்ளிட்ட 48 நாடுகள் இந்த ஈ.எம்.எஸ். முறையில் பொருட்களைப் பரிமாற்றிக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது

இவ்வாறு அறிமுகம் செய்த ஈ.எம்.எஸ். பொதிகள் விநியோகமானது வெளிநாட்டிலுள்ள உறவுகளுக்கு மிகக் குறைந்த விலையில் மிகவும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் பொதிப்பரிமாற்றம் செய்துகொள்ள முடியுமெனவும் மேலதிக உதவிகளுக்காக 1950 என்ற அவசர தொலைபேசி இலக்கமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த முறையை நுவரெலியாவில் சந்தைப்படுத்தும் குழுவுக்காக தனியான வாட்ஸ் அப் செயலியில் பயன்படுத்த கியூ ஆர் (Quick Response) குறியீடு ஒன்றும் வெளியீடு செய்யப்பட்டுள்ளது

குறித்த நிகழ்வில் நுவரெலியா பிரதேச தபால் அத்தியட்சகர் டி.எம். ஜீவிக்க திசாநாயக்க கலந்துகொண்டார்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியாவில் கழிவு முகாமைத்துவ பயிற்சித்திட்டம் அங்குரார்ப்பணம்



இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வரும் தூய்மையான இலங்கை 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் நுவரெலியா தலைமையகப் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட தோட்டங்களைச் சூழவுள்ள கிராமங்களில் முறையான கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி வழங்கும் திட்டத்தின் அங்குரார்ப்பணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (09) காலை இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட பொலிஸ் மா அதிபர் பிரியங்கர டி சில்வா தலைமையில் நுவரெலியா மாவட்ட பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நுவரெலியா தலைமையகப் பொலிஸ் எல்லைக்குட்பட்ட அனைத்து தோட்டங்களுக்கும் குப்பைகளைச் சேகரிப்பதற்கான நடைமுறை அறிவை வழங்க நுவரெலியா பொலிஸ் சமூகப் பிரிவினால் நுவரெலியா பிரதேசத்துக்கான தனித்துவமான வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவ திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடுகளில் வீசப்படும் குப்பைகளை தனித்தனியாகப் பிரித்து சேகரிக்கப்படும் தொட்டிகளை தனித்தனியாகக் கண்காணித்து அதன் மூலம் குப்பைகளைச் சேகரித்து விற்பனை செய்வதுடன் தோட்டத்துக்கு உரம் வழங்கும் வேலைத்திட்டத்தையும் கிராம அளவில் பணியாற்றும் பொலிஸ் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தேவையான பிளாஸ்ரிக் கொள்கலன்கள் நுவரெலியா பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியங்கர டி சில்வாவிடம் அகலவத்தை தோட்டக் கம்பனியின் நடவடிக்கை தலைவர் சஞ்சீவ திசாநாயக்கவினால் கையளிக்கப்பட்டன.

தோட்டங்களைச் சூழவுள்ள மக்களுக்கு கழிவு முகாமைத்துவ கொள்கலன்கள் விநியோகம் நுவரெலியா தலைமையகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி தலைமையில் அடுத்த வாரத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நுவரெலியா தலைமை அலுவலகத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி, நுவரெலியாவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொலிஸ் பரிசோதகர்கள், உப பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் அதிகாரிகள், லபுக்கலே தோட்ட அத்தியட்சகர் நிராஷ் பள்ளிகுரு, அகலவத்தை தோட்ட நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நலன்புரி நடவடிக்கை முகாமையாளர் எரங்க ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கலாநேத்ரா விருதுக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து வழங்கும் 'கலாநேத்ரா-2025' விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலகப் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருக்கவேண்டும். அதேவேளை, 25 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

துறைசார்ந்த ஆவணப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தேவை ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி நேர்முகத் தெரிவுக்கு அழைக்கப்படுவார். கடந்த காலங்களில் பிரதேச விருதுபெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. குறித்த துறையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விருது தெரிவுக்குள் உள்வாங்கப்படுவர்.

விண்ணப்பங்களை 18.03.2025ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இம்முறை சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை, மெல்லிசை), மரபுக்கலை (நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு), நாடக ஆற்றுகை, சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை (வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன) ,குறும்படம், இயல் (பேச்சு, விவாதம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம்), அறிவிப்பு, மரபு இசை (தவில், நாதஸ்வரம், பறை,உடுக்கு), ஊடகம் போன்ற துறைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

## முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதிய பிரச்சினைக்குத் தீர்வு தேவை

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



(விஜயரத்தினம் சரவணன்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பு அவசியமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்படி கருத்தை வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளிகளில் மிகவும் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்களாக மகளிர்களே கடமையாற்றுகின்றார்கள்.

இவ்வாறு கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் ஒருமாதக் கொடுப்பனவு வெறும் 6,000 ரூபா மட்டுமேயாகும். என்ன செய்வது, எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவிக்கின்றார்கள். இது தொடர்பில் பலரும் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

மிகவும் சிறிய பிள்ளைகளுக்கு அறிவைப் போதிக்கின்ற ஒப்பற்ற சேவையாற்றுபவர்களாக இந்தமுன்பள்ளி ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். இந்த முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு மகளிர் விவகார அமைச்சரும் தம்மாலான ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களின் ஒப்பற்ற சேவைக்குரிய கொடுப்பனவு போதுமானதா? சற்று எண்ணிப்பாருங்கள். இந்தவிடயத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும். அதற்கு மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம் - என்றார்.

## தனங்கிளப்பு - மறவன்புலோ விவசாயிகள் வரிசெலுத்த கமக்கார அமைப்பினர் அறிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)

தனங்கிளப்பு மற்றும் மறவன்புலோ பிரதேசங்களில் நெற்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் நாளை செவ்வாய்க்கிழமை (11) 2025ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரி மற்றும் சந்தாப் பணம் ஆகியவற்றை சாவகச்சேரியில் செலுத்தமுடியுமென கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

2025ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரியை 31/03/2025க்கு முன்னர் செலுத்தவேண்டியிருப் பதனால் நாளை (11) செவ்வாய்க்கிழமை காலை 8.30 தொடக்கம் 1.30 மணி வரை சாவகச்சேரி டச் வீதி செருக்கல் பிள்ளையார் ஆலயத்துக்கருகில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் ஏக்கர் வரி மற்றும் சந்தா பணத்தை செலுத்தமுடியுமெனவும் வருகை தரும்போது 2024ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரிச் சிட்டையுடன் வருகைதருமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## உள்நாட்டுத் துப்பாக்கிகள் - கஞ்சாவுடன் வவுனியாவில் சந்தேகநபர்கள் ஐவர் கைது



உள்நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் (08) தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் குழுவினர் வவுனியா, பாவற்குளம் படிவம் - 2 பகுதியில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், இரு இடங்களிலிருந்து மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த ஒருவரிடமிருந்து 02 கிராம் கஞ்சா மற்றும் 02 மான் கொம்புகளும் மீட்கப்பட்டன. இதனையடுத்து அப் பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன், நீதிமன்றால் இரு பிடிவிறாந்துகள் விதிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் இதன்போது கைதுசெய்யப்பட்டார். குறித்த மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், வவுனியா, கோவில்குளம் பகுதியில் மாடு திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பாவற்குளம் படிவம் - 2 பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரும் இதன்போது மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளின் பின் உளுக்குளம் மற்றும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## யாழில் மாடொன்றின்மீது மோதியது ரயில்



(பு.கஜிந்தன்)

யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மாடு ஒன்று மோதி உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று (09) முற்பகல் 11.30 மணியளவில் யாழ். புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வாழ்வாதாரத்துக்காக குடும்பஸ்தர் ஒருவரால் வளர்க்கப்பட்ட மாடே தண்டவாளத்தைக் கடக்க முற்பட்டவேளை ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

## யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியின் மகன் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலஞ்சம் பெற்றதாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவாகியிருந்தது.

பொலிஸ் முறைப்பாட்டைச் செய்தவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மது போதையில் வாகனம் செலுத்திச்சென்றபோது யாழ்ப்பாணம் பொலிஸாரினால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், குறித்த வழக்கை இல்லாது செய்வதற்காக யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியின் மகன் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றிருந்தார். இருப்பினும், கொடுத்த வழக்கு நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் முறைப்பாட்டாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் தலைமைப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியின் மகனுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டபோதும் பொலிஸார் குறித்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுசெல்லவில்லை. இந்த விடயமானது மீண்டும் ஊடகங்களில் பேசுபொருளாகியது.

இவ்வாறான பின்னணியில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர்




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணிகள் பங்கெடுக்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் கொழும்பில் நடைபெறவுள்ளது.

தொடரில் மொத்தம் 07 போட்டிகளும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு அணியும் இரண்டு தடவைகள் குழுநிலைப் போட்டிகளில் மோதவிருக்கின்றன. பின்னர் குழுநிலைப் போட்டிகளின் அடிப்படையில் இரண்டு அணிகள் தொடரின் இறுதிப் போட்டியில் ஆடவிருக்கின்றன.

குறித்த தொடர் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதல் மே மாதம் 11ஆம் திகதி வரை பகல் நேர ஆட்டங்களாக நடைபெறவுள்ளன.

**தொடர் அட்டவணை**

ஏப்ரல் 27 – இலங்கை எதிர் இந்தியா
ஏப்ரல் 29 – இந்தியா எதிர் தென்னாபிரிக்கா
மே 01 – இலங்கை எதிர் தென்னாபிரிக்கா
மே 04 – தென்னாபிரிக்கா எதிர் இந்தியா
மே 08 – இலங்கை எதிர் தென்னாபிரிக்கா
மே 11 – இறுதிப் போட்டி

# மூன்றாவது ஆட்டத்தில் படுதோல்வியடைந்த இலங்கை மகளிர் அணி

## ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து




**(அகீல் சிஹாப்)**

இலங்கை மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் 98 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டிய நியூஸிலாந்து மகளிர் அணி ஒருநாள் தொடரை 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியானது, நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நியூஸிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட மூன்று ஒருநாள், மூன்று ரி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது. ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில், இரண்டாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 78 ஓட்டங்களால் வெற்றியீட்டி தொடரில் முன்னிலை வகித்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 280 ஓட்டங்களைக் குவித்தது. கடின இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 182 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அடுத்து இரு அணிகளுக்குமிடையிலான 03 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் வெள்ளிக்கிழமை (14) க்ரைசேர்ட்ச்சில் ஆரம்பமாகிறது.

# விளையாட்டுத் துளிகள்

பிரிட்டிஷ் ராலி சம்பியன்ஷிப் கார் பந்தயத்தின் 2025 சீசனில் MRF இணைந்துள்ளது. மேலும் இந்தத் தொடருக்குத் தேவையான அனைத்து டயர்களையும் விநியோகம் செய்யும் உரிமையையும் பெற்றுள்ளது. ஐரோப்பிய ராலி சம்பியன்ஷிப்பில் ஆதிக்கம் செலுத்திய MRF டயர்ஸ் அணி தற்போது இங்கிலாந்தில் தங்களது திறனை வெளிப்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது. இந்தத் தொடரில் MRF அணியின் சவாலை ஜேம்ஸ் வில்லியம்ஸ், மேக்ஸ் மெக்ரே ஆகியோர் வழிநடத்தவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★

நியூஸிலாந்து அணி வீரர் கேன் வில்லியம்சன் சர்வதேச கிரிக்கெட்டில் 19,000 ஓட்டங்களை எட்டிய முதல் நியூஸிலாந்து வீரர் எனும் புதிய வரலாற்றைப் படைத்தார். இந்த மைல்கல்லை விரைவாக (440 இன்னிங்ஸ்) எட்டிய 4ஆவது வீரர் எனும் பெருமையைப் பெற்றார். இதற்கு முன் விராட் கோஹ்லி (399), சச்சின் டெண்டுல்கர் (432), பிரையன் லாரா (433) ஆகியோர் 19,000 ஓட்டங்களைக் கடந்திருந்தனர்.

★★★★★★★★★★★★★★★

சம்பியன்ஸ் கிண்ணத்தின் நியூஸிலாந்துடனான அரையிறுதி ஆட்டத்தில் 67 பந்துகளில் சதம் விளாசிய டேவிட் மில்லர், ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளை எதிர்கொண்டு விரைவாக சதம் விளாசிய வீரராகச் சாதனை படைத்தார். இதற்கு முன்னர் கடந்த 2002இல் இங்கிலாந்துக்கெதிராக இந்திய வீரர் சேவாக் 77 பந்துகளிலும் 2025இல் இங்கிலாந்துக்கு எதிராக ஆஸி. வீரர் ஜோஷ் இங்கிலிஸ் அதே 77 பந்துகளிலும் சதம் விளாசியிருந்தனர்.

★★★★★★★★★★★★★★★

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் அஸ்மதுல்லா ஓமர்சாய், ஐ.சி.சி யின் புதிய ஒருநாள் சகலதுறை வீரருக்கான தரவரிசையில் சக நாட்டு வீரர் முஹமது நபியை பின்தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளார். மேலும் ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையிலும் அவர் 12 இடங்கள் ஏற்றம் கண்டு 24ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★

மகளிர் பிரீமியர் லீக் போட்டியில் உபி வாரியர்ஸ் அணி, 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை வீழ்த்தியது. இந்தத் தோல்வியால் நடப்பு சம்பியனான அவ்வணி முதல் அணியாகத் தொடரிலிருந்து வெளியேறியது.

# கொழும்பு சேர். ராசிக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள்



கொழும்பு சேர். ராசிக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. விளையாட்டுப் போட்டிகளுக்கு கல்லூரியின் அதிபர் திருமதி ஜி. ஃப்ரீடா கான் தலைமைத்துவம் வழங்கினார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ஆர். தேவபந்து மற்றும் கௌரவ அதிதியாக கொழும்பு வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.எஸ்.என்.அல்விஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். விளையாட்டுப் போட்டிகளின் நிறைவில் சபா இல்லம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

# தடைக்கு மத்தியிலும் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கும் சின்னர்



சர்வதேச டென்னிஸ் வீர, சர்வதேச டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் காலம் தடையை சின்னர் தொடர்ந்து வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியலை சங்கம் வெளியிட்டது. இதில் ஆடவர் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கி 03 மாத அனுபவித்து வரும் இத்தாலி வீரர் ஜானிக் முதலிடத்தில் நீடிக்கிறார்.

02ஆவது இடத்தில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவும் 3ஆவது இடத்தில் ஸ்பெயினின் அல்காரசும் உள்ளனர். முன்னாள் நம்பர் 1 வீரரான ஜோகோவிச் 07ஆவது இடத்தில் தொடருகிறார். டுபாய் ஓபன் டென்னிசில் சம்பியன் பட்டம் வென்ற சிட்சிபாஸ் (கிரீஸ்) இரு இடம் உயர்ந்து 09ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பெரிய அளவில் மாற்றமில்லை. பெலாரசின் சபலென்கா முதலிடத்திலும் போலந்தின் ஸ்வியாடெக் 02ஆவது இடத்திலும் அமெரிக்காவின் கோகோ காப் 03ஆவது இடத்திலும் தொடருகிறார்கள்.

# மெரிடா ஓபன் நவாரோ வசம்



மெரிடா ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் எம்மா நவாரோ சம்பியன் பட்டம் வென்றார்.

மெக்ஸிகோவில் நடைபெற்ற குறித்த மெரிடா ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் திங்கட்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் கொலம்பியாவின் எமிலியானா அரங்கோ, அமெரிக்காவின் எம்மா நவாரோ உடன் மோதினார்.

இதில் அதிரடியாக ஆடிய எம்மா நவாரோ 6:0, 6:0 என எளிதில் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

# டயலொக் நிறுவனத்தால் மேலும் நான்கு பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கிவைப்பு




இலங்கையின் முதல்நிலை இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி., இலங்கை முழுவதும் உள்ள இளம் கிரிக்கெட் வீரர்களை மேம்படுத்தும் நோக்கில் இந்த ஆண்டில் நான்கு தகுதியான பாடசாலைகளுக்கு அத்தியாவசிய கிரிக்கெட் உபகரணங்களை வழங்கியுள்ளது.

ரோயல்-சென்ட் தோமஸ் கிரிக்கெட் போட்டியின் ஒருங்கிணைப்புக் குழுவின் மேற்பார்வையில் ரோயல் கல்லூரி அதிபர் கிரிஷாந்த சில்வா மற்றும் செயற்பாட்டு வார்டன் அசங்க பெரேரா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், மஹிந்த மகா வித்தியாலயம் - கந்திரியகம, ஸ்ரீ சங்கபோதி வித்தியாலயம், ஸ்ரீ சுமங்கலா கல்லூரி - வரியபொல மற்றும் விஜேயபா தேசிய பாடசாலை - ஹூங்கமா ஆகியவை 2025ஆம் ஆண்டுக்கான நன்மை பெறும் பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளுக்கு முக்கியமான கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டு இளம் விளையாட்டு வீரர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கத் தேவையான உபகரணங்களும் வழங்கப்படுகின்றன. இலங்கையின் விளையாட்டு வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி., இந்த வருடத்திலும் ரோயல்-சேன்ட் தோமஸ் கிரிக்கெட் போட்டியில் ஒரு ஓட்டத்துக்கு ரூ.1,000 மற்றும் ஒரு விக்கெட்டுக்கு ரூ.10,000 வழங்க உறுதியளித்துள்ளது.

டயலொக் நிறுவனம் கிரிக்கெட்டுக்கப்பால் இலங்கையின் ஏனைய விளையாட்டுகளுக்கும் அனுசரணை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7